# எங்கள் புதையல்
# OUR TREASURE



திருமதி. அருளப்பு அன்னம்மா

J/58

To:

Dear Father Monti,

# வணக்கம்



அன்னையைப் போல் ஒரு செல்வமில்லை
அவள் அருளின்றி ஓர் இனமும் அசைவதில்லை.

பொன்னைப் போல் அவளை நாம் போற்றுவோமே,
பூமியெங்கும் அவள் புகழை பாடிடுவோமே.

கைமாறு கருதாத அவளின் அன்பு,
கடலிலும் பார்க்க பெரியதன்றோ,
நாம் கண் கண்ட தெய்வம் நீயே அம்மா,
நீ கடவுள் எமக்களித்த புதையல் அன்றோ!

# எங்கள் புதையல்
## Our Treasure



## திருமதி அருளப்பு அன்னம்மா

பிறப்பு - Born
10.10.1910

மணப்பெண் - Married
03.09.1930

கைம்பெண் - Widowed
02.09.1932

இறப்பு - Died
17.09.1997

# அன்பின் அர்ப்பணம்

"அம்மா, நீங்கள் சாதாரணமாக சமைத்துச் சாப்பிடும் உணவுதான் எனக்கு வேண்டும். அதுதான் எனக்கு உருசையாயிருக்கும், எனக்கென்று தாளித்து தயாரித்தது வேண்டாம்".

அவ்வாறு தயாரித்த "உணர்வை" உங்களுடன் நான் பகிர்ந்து கொள்ளுகிறேன். சொல்லிச் செய்தலிலும் பார்க்க, சொல்லாமல் செய்வதில் ஆழமான அர்த்தம் உண்டு, கலப்படமில்லாப் பார்வை உண்டு. எனவே, நிகரற்ற பெறுமதி உண்டு.

"எங்கள் புதையல்" உங்கள் இதய புதையல்கள். இவை துயரம் பகிர்ந்தவேளையில் நீங்கள் சிந்திய சிந்தனை முத்துக்கள்! இதய இரகசியங்கள்; அன்பின் உள்ளங்களிலிருந்து மலர்ந்த மடல்கள், திருமுகங்கள், எனது தாயாரின் வாழ்வின் பலகோண முகங்கள்.

"வடிவான அம்மா" என்று பலர் சொன்னதை நான் கேட்டுள்ளேன். "அகத்தின் அழகு முகத்தில் தெரியும்". உள அழகை இரசீத்து பாருங்கள். "நல்லாய் இனி"!

அன்பே உருவான,
நன்மை புரிகின்ற,
அழகு சொரிகின்ற இறைவன்,
தன் சாயலாக எனக்குத் தந்தார்
என் அம்மாவை.

அதே சாயலை என்னில் உருவாக்க,
இறை அமுதூட்டி,
தியாக சிந்தையுடன் தன்னை உருக்கி,
அயராது இறுதி மட்டும் உழைத்து
என்னை வளர்த்தார்,
எனக்காக வாழ்ந்தார் என் அம்மா:
"அம்மா! உங்களுக்கு என்ன வேண்டும்?"
"என்ன வேண்டும்?? அன்புதான் வேண்டும்".

இதோ, எமது அன்பின் அர்ப்பணம்!

இப்படிக்கு,

சொல்லால் வடித்த - உடன் பிறப்புக்கள்
- உற்றஅனுதாபிகள்
நேரில் வழங்கிய - இனிய நெஞ்சங்கள்
- அன்பில் மலர்ந்தவர்கள்

நன்றி
மகன் பிரான்சிஸ் யோசவ்

# உள்ளே


| திகதி | | | பக்கம் |
| --- | --- | --- | --- |
| 17.09.97 | N. நளாயினி | நினைவழியா நாள் ........ | 01 |
| 21.09.97 | அருள்திரு J. மைக்கல் சவரிமுத்துO. M. I. | என் ஆசை அக்கா ........ | 02 |
| 22.09.97 | Bishop T. Savundaranayagam | வீரத் தாய் ..................... | 03 |
| 23.09.97 | Bishop John M. Sherlock | நாளாந்தம் செபிப்பவர் | 04 |
| 02.10.97 | அருட்செல்வி பிரான்சிஸ்கா F.M.M | இறைபுகழ் பாடுபவர் | 05 |
| 02.10.97 | N. நளாயினி | இரத்தபாசம் அல்ல, இதய பந்தம் ................. | 06 |
| | R. யசிந்தா | வாழவைத்தவர் | 09 |
| | K. விமல் | அம்மம்மா, ஓர் இனிய கனவு ................. | 10 |
| | கவலையில் நேரில் கலந்தோர் | அன்பு விடை ................. | 11 |
| 19.09.97 | Sr. M. Christabel | ................................... | 04 |
| 19.09.97 | Fr. E. Sebastian | ................................... | 05 |
| 19.09.97 | திரு. சு. வைகுந்தநாதன் | ................................... | 12 |
| 22.09.97 | Fr. A. I. Bernard | புனிதரின் தோழமையில் | 12 |
| 22.09.97 | Fr. Louis Ponniah O. M. I. | குருக்களின் அன்னை .... | 13 |
| 23.09.97 | Fr. J. N. Nicholas | ................................... | 12 |
| 23.09.97 | Fr. R. H. Sahayanayagam | ................................... | 13 |
| 24.09.97 | Xaverian Family | ................................... | 13 |
| 24.09.97 | Fr. G. Pilendran | மனம் கவரும் செயல் .... | 14 |
| 24.09.97 | Fr. S. J. Rajanayagam | ................................... | 14 |
| 24.09.97 | Sr. Joyce Marie A. C | ................................... | 14 |
| 24.09.97 | S. P. C. Teachers' Guild | ................................... | 15 |
| 24.09.97 | Fr. J. P. E. Selvarajah | விசுவாச வாழ்வு ............ | 15 |
| 25.09.97 | செல்வன் J. இம்மானுவேல் | எமது வழிகாட்டி ............ | 16 |
| 25.09.97 | திருமதி கமலா பொன்னையா | அன்பு அம்மா ................ | 17 |
| 25.09.97 | திருமதி T. அல்போன்சா | ................................... | 17 |
| 29.09.97 | Sr. M. Victorine H. C. | எல்லாம் உமக்காக ....... | 18 |
| 29.09.97 | Sr. M. Consilia H. C. | ................................... | 18 |

| | | | |
|---|---|---|---|
| 30.09.97 | திருமதி யோண் மாகிறேற் | ஆசையாச்சி .................. | 19 |
| | Sr. M. Jerome A. C. | .......................................... | 19 |
| 05.10.97 | திரு Z. சிங்கராயர் J. P. | பரலோக அம்மா............. | 20 |
| 06.10.97 | Sr. Terese Grace A. C. | பரிசுத்த பெண்மணி ...... | 21 |
| | Sisters of H. F., Mulankavil | .......................................... | 21 |
| 08.10.97 | Miss Ranjini, Nitjini, Che | விண்ணக அமைதியில் .. | 22 |
| 10.10.97 | Mr. S. Mary Joesph | .......................................... | 22 |
| 10.10.97 | Fr. J. Michael Saverimuthu OMI | 87வது பிறந்தநாள் ......... | 23 |
| 12.10.97 | திரு M. தார்சீசியஸ் | சேனைச் சேவகி ........... | 24 |
| | Mr. F. Francis | .......................................... | 24 |
| 13.10.97 | திருமதி யோண் மாகிறேற் | .......................................... | 19 |
| 13.10.97 | Fr. P. Jesunesan O. M. I. | நல்ல ஆன்மா .............. | 25 |
| 13.10.97 | செல்வி நிர்மலா யோசவ் | .......................................... | 25 |
| 13.10.97 | திரு சூ. தேவதாசன் | துயர்துடைப்பவர் ........... | 26 |
| 13.10.97 | செல்வி M. M. தார்சீசியஸ் | .......................................... | 26 |
| 15.10.97 | Sr. M. Sophia H. F. | அழகான மலர் ............... | 27 |
| 15.10.97 | Sr. Herman Joseph H. F. | .......................................... | 27 |
| 17.10.97 | திரு Z. சிங்கராயர் J.P. | குருசும் முத்தமும் ......... | 28 |
| 20.10.97 | அருள்செல்வி பிரான்சிஸ்கா F. M.M | .......................................... | 27 |
| 23.10.97 | அருள்திரு | | |
| | J. மைக்கல் சவரிமுத்து O. M. I. | விதைத்ததை அறுத்தா.... | 29 |
| 23.10.97 | Sr. Mary Lucilla H. F. | "காணிக்கை மாதா" ..... | 30 |
| 25.10.97 | திரு M. A. பிரகாசராசா | ஒளி விளக்கு ............... | 31 |
| 25.10.97 | Fr. J. P. E. Selvarajah | .......................................... | 31 |
| 29.10.97 | Fr. S. Rex Constantine C. M. F | மாலையில் செபமாலை.. | 32 |
| 30.10.97 | Fr. Justin Gnanapragasam | .......................................... | 32 |
| 02.11.97 | திரு T. கலாமணி | அன்னையின் மகிமை .... | 33 |
| 03.11.97 | திரு A. எட்வெட் | .......................................... | 33 |
| | Miss Patricia Patrick | நீங்கா நினைவுகள் ....... | 34 |
| 04.11.97 | (Late) Mrs. M. A. Thambiratnam | .......................................... | 34 |
| 10.11.97 | Sr. Maria Goretti H. C. | .......................................... | 35 |
| 13.11.97 | திரு Z. சிங்கராயர் J. P. | இந்தியாவுக்கு அம்மா ... | 35 |

| | | | |
|---|---|---|---|
| 16.11.97 | Fr. Jeevanadas Fernando O. M. I. | ................................. | 36 |
| | Mrs. Jeyanthy Moses | ................................. | 36 |
| 26.11.97 | திரு சி. மே. மாட்டீன் | ................................. | 37 |
| 28.11.97 | திரு K. செல்வா | வாழ்க்கைத்துணை ......... | 36 |
| 28.11.97 | திரு S. ஸ்ரனிஸ்லாஸ் | போற்றப்படவேண்டியவர் | 37 |
| 05.12.97 | Sr. M. Consilia H. C. | தியாக சீலிகள் .............. | 38 |
| 10.12.97 | Fr. Alex Dassanayake | ................................. | 38 |
| | Mrs. Ruthirakumaran | ................................. | 38 |
| 11.12..97 | திருமதி சுகந்தினி | வரவேற்பவர் ................ | 39 |
| 11.12..97 | திரு M. ஜெயராஜன் | ................................. | 39 |
| 15.12.97 | Mr. M. Ben Aseervatham | இறைவன் சந்நிதியில் .... | 40 |
| 15.12.97 | Fr. Jerribel Kirubaharan | ................................. | 40 |
| 15.12.97 | Fr. S. Edwin | ................................. | 41 |
| 15.12..97 | திரு V. N. நித்தியானந்தன் | தெய்வீகமானார் ............ | 41 |
| 23.12.97 | Fr. J. P. E. Selvarajah | ................................. | 41 |
| 23.12.97 | Fr. Maria Antony | ................................. | 42 |
| 01.01.98 | திரு யோன் றொபின்சன் | "மகனின்" சாட்சியம் ...... | 42 |
| | Mr. Albert Santiapillai | ................................. | 42 |
| 06.01.98 | செல்வி T. குருசுமுத்து | தியாகச் சுடர் ............... | 43 |
| 06.01.98 | Mr. W. J. Navaratnam | ................................. | 43 |
| 07.01.98 | Fr. R. Stalin | ................................. | 43 |
| 15.01.98 | Mr. R. Alphonsus | ................................. | 44 |
| 15.01.98 | Sr. M. Lisa A. C. | ................................. | 44 |
| 11.03.98 | Fr. Anton Matthias | இறைவா உமக்குநன்றி | 44 |
| 29.03.98 | திரு M. J. அலோசியஸ் | ................................. | 44 |
| | Mrs. Angela Alphonsus | ................................. | 16 |
| 02.06.98 | Fr. P. Jesunesan O. M. I. | ................................. | 25 |
| 25.09.97 | Son to his Maternal Uncle | Final Journey .................... | 45 |
| 25.09.97 | மகன் தன் தாய் மாமனாருக்கு | இறுதிப்பயணம் .............. | 47 |

நான் பார்த்த தெய்வம் நீயே அம்மா!
என் இதயத்தின் சிகரமும் நீயே அம்மா!
ஆயிரம் ஜென்மங்கள் கடந்தாலும் எந்தன்
அழியாத செல்வம் நீயே அம்மா!

பெரும் புதையலைப் போல் எனைக் காத்தாய் அம்மா,
உன் சிறகினால் தினம் எனைப் போர்த்தாய் அம்மா,
அன்னை தந்தையாகி எனை வளர்த்தாய் அம்மா,
ஆகாய வானில் இன்று நீயே அம்மா!

● **N. Nalaayini** புதன்

(அன்பில் மலர்ந்தவர்) 17.09.1997

# நினைவழியா நாள்

மரணம் மரணத்தின் மகத்தான சக்தியை மரணம் வருமுன்பே அறிந்து கொள்ள முடிவதில்லை. "விட்டுவிடப்போகுதுயிர், இட்டவுடனே உடலைச் சுட்டுவிடப்போகின்றார் சுற்றத்தார்" என்ற பட்டினத்தார் மரணத்தைச் சுட்டிக்காட்டினார். ஆனால் அது எப்போது எவ்வகையில் என்பதை யாருமே அறிந்திருக்கமுடியாது.

அன்று நாமும் அவ்வாறுதான இருந்தோம். அந்த உடம்பிறகான தவணை முடியப்போகின்றது என்பதை கொஞ்சமும் அறியாமலேயே இருந்தோம். நாங்கள் நால்வரும் அம்மம்மாவை சுற்றி விதம் விதமாக கதைகேட்டுக் கொண்டிருக்கின்றோம் எங்களுடன் கதைத்துக் கொண்டிருக்கின்றார். "எனது படத்தை எடுத்து மாட்டிவிடுங்கோ", என்று கூறுகிறார். சரி, வேறு என்ன செய்வது? "உத்தரியத்தைபோடுங்கோ" திடீரென விமல் கேட்கிறான்! அம்மம்மா உங்களுக்கு என்ன வேண்டும், மாம்பழம் வேண்டுமா? தோசை வேண்டுமா? உடனே அவவின் பதில் "என்ன வேண்டும்? என்ன வேண்டும்? அன்பு வேண்டும், அன்புதான் வேண்டும்" என்று கூறினார். மௌனமானர், மௌனம், மௌனம். அதன்பின்பு கதைகேட்கவில்லை. கதைக்கவில்லை, நாம் அனைவரும் திகைத்து விட்டோம். அவவினுடைய ஆன்மா ஆண்டவனை நோக்கிச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருப்பதை நாமறியோம்.

அம்மம்மா மெதுவாக முச்சுவிட்டுக் கொண்டிருக்கின்றா, அவர் ஆசைப்பட்டுக்கேட்ட "கோழிச் சூப்" கொடுக்கின்றோம், மெதுவாக இறங்குகின்றது. வியர்வையைத்துடைத்து பவுடர்போட்டு மறுபக்கம் திருப்பி விடுகிறோம்.

மனத்தால் உடலும் உடலால் மனமும் பாதிக்கப்படுவதிலிருந்து நீங்கி பேச்சு முச்சற்ற பேரின்ப வெள்ளத்தைக் காண விரைகின்றார். சர்வாங்கமும் ஒரு முகமாகி இன்ப துன்பங்களை கடந்து நிற்கும் நிலையே பேரின்பநிலை. "பேச்சு முச்சற்ற பேரின்ப வெள்ளமுற்று நீச்சநிலை காணாமல் நிற்கும் நாள் எந்தநாளோ" என்றார் தாயுமானவர்.

அவர் சாவை அழைக்கவில்லை, எல்லாங்கடந்த பேரின்ப நிலையை அழைக்கின்றார். அதுதான் "அன்பு வேண்டும் அன்பு வேண்டும்" என கூறினாரோ! அவர் அடிக்கடி பாடும் பாடல் நினைவிற்கு வருகின்றது.

ஓர் நாள் வரும் நிசமே
நேரமும் நாம் அறியோம்........

ஆம், அது நிசமாகவே வந்துவிட்டது. வந்த பின்புதான் அறிந்தோம் அது நிசம்தான் என்று, அப்போது நேரம் 3.20 (பி.ப)

● **Rev. Fr. J. Michael Saverimuthu O. M. I**
(உடன் பிறந்த சகோதரன்)

அவரிக்காடு, சவேரியார்புரம்,
கிளாலி, எழுதுமட்டுவாள்.
21.09.1997

# என் ஆசை அக்கா

உன் அம்மாவும் என் ஆசை அக்காவும் மரணத்திரையுள் உள்ளானதை யாரோ ஒருவர் சென்ற வாரம் புலிகளின் குரல் வானொலியில் கேட்டதாக நேற்று அறிவித்தார்.

சொன்ன விபரங்கள் சரியானதால் உண்மை தான் என நம்புகிறேன். கண்ணீர் தாரை தாரையாய் வடிந்தது. என் ஆசை அக்காவின் இறுதி நாட்களில் உங்கு இருக்கலாமென மிகவும் ஆவலபட்டு, இங்குள்ள அலுவல்களை விரைவில் முடித்து கொழும்பு சென்று வன்னி வரலாம் என்று அவதிப்பட்டும் வரமுடியாமல் போயிற்று.

தம்பி மகனே, அமைதியாய் இரு. உன்னை பெற்று அரும்பாடு பட்டு வளர்த்தெடுத்து, ஒரு குரு மகனைக் கண்டு அவர் கையிலேயே மரிக்கும் பாக்கியம் அக்காவிற்கு கிடைத்தது.

புனித மொனிக்கம்மாள் தன் மகன் அகுஸ்தீனாரிடம் கேட்டுக் கொண்டதை மறக்காது, உன் தாயிற்காக திருப்பீடத்தில் எப்போதும் நினைத்துக் கொள். நானும் என் பெற்றோர் சகோதரருக்காக தினம் திவ்விய பூசையில் நினைவு கூருவது போல், நீயும் உன் பெற்றோருக்காக, விசேடமாய் உன் தாயிற்காக வேண்டிக்கொள்.

அங்கலாய்க்க ஒன்றில்லை. அவ எப்பொழுதும் நல்மரணத்திற்கு எதிர்பார்த்தே உத்தரித்தா நீயும் உன்னால் இயன்றளவு உன் தாய்க்கு தொண்டுசெய்ய கிடைத்த பாக்கியத்திற்கு நன்றி சொல்லி அவவிடம் தினமும் வேண்டிக்கொள்.

நாளயினி, ஜெசிந்தா, விமலின் துன்ப துயரங்களை நான் அளவிடக்கூடும், அவர்கள் செய்ததோ வேறு எவரும் செய்ய முடியாத சேவை, இறைவன் நிச்சயமாக அவர்கள் வாழ்வை வளம் பெறச்செய்வார். கத்திக் கதறியிருப்பார்களே?

உனது சகோதர குருக்கள், நண்பர், மற்றோர் புடைசூழ மனோகரமாக அக்காவை அடக்கம் செய்திருப்பீர்கள் என்று எனது கணிப்பு. எனக்கு கொடுத்து வைக்கவில்லையே. கற்பனை செய்யமுடியும்? செய்கிறேன்.

என் அருமை மகனே! நீ பிறந்த நாளை இன்று நினைவு கூருகின்றேன். உனது பால, வாலிபப் பிராயத்தையும், குருத்துவ கல்வி, தொண்டையும் நினைவு கூருகின்றேன்.

இனி எனது முறை, எனக்காகவும் வேண்டிக் கொள்ளவும். அமைதியாயும், ஆறுதலாயும் இரு.

● **Bishop T. Savundaranayagam**
யாழ். ஆயர்

Bishop's House,
Jaffna.
22.09.1997

## வீரத் தாய்

On behalf of myself and the clergy I convey my deepest sympathies to you.

It is a big loss for you since you had been very close to her and she almost lived for you. I had come to know her when I was a young priest and she had a special liking for me and she liked all the priests and respected them. I am very sorry that she is no more. Last time when I met you at Puthukudiyiruppu I left with you a cake and I wished that you would feed her a small piece.

When the Exodus from Jaffna took place you had the difficulty of taking her to a safe palce, and then you took her across the kilaly lagoon with great difficulty. Even in Kilinochchi you had the problem of finding a suitable accommodation and you had to shift to Kalmadhu, Mulliavalai and then again to Puthukudiyiruppu. She bore with great fortitude all these troubles when she was bedridden even.

Now that she is no more you would feel very much the loss, and her absence will leave a big void within you. Only our Christian Hope can console us.

We will certainly pray for her and also for your welfare.

....................

Miss Nalayini who was looking after your mother when there was no one to assist, not even your relatives, will feel very much this loss. Please convey my kind regards to her.....

The Clergy in Kilinochchi would have been with you at this hour of suffering to express their solidarity with you. Once again I assure you my prayers for your mother.

● **Bishop John M. Sherlock**
லண்டன் ஆயர்

Office of the Bishop
1070, Waterloo Street,
London, Ontario, Canada.
October 23, 1997

## நாளாந்தம் செபிப்பவர்

It is with great sorrow that I learned the news of the death of your mother. One of my warm memories of my visit to Sri Lanka (in 1981) was the opportunity to visit your mother in her home. One of my lasting impressions for me has been the knowledge that she was continuing to pray for me on a daily basis. Thank God, she will be able to do it even more effectively now in Heaven and she undoubtedly will have a much clear understanding of how badly I need the prayers.....

In addition, I will celebrate a Mass personally for your mother in the near future.

● **Sister Christabel H. F.**
முன்னாள் தி.கு. சபைத் தலைவி

Holy Family,
Akkarayan.
19.09.97

Please accept my heartfelt condolence at the passing away of your beloved mother. May she rest in peace and eternal joy of the Lord.

It's true that your sadness can't be shared and only you can feel the ache that's in your heart today. But others care and understand and want to tell you too, of all the heartfelt sympathy that is going out to you.

● **Sister Francisca F. M. M.**
(உடன் பிறந்த சகோதரி)

Asunta Nivasa,
St. Anne's Church,
Maliboda.
02.10.1997

## இறை புகழ் பாடுபவர்

அம்மாவின் மரணத்தைப் பற்றி Red Cross மூலமாக அறிந்து எங்கள் பிறோவின்சல் எனக்கு எழுதிய துக்கமான கடிதத்தில் இருந்தும் Red Cross பத்திரத்தில் நீர் குறித்தபடியும் அறிந்து மிகவும் விசனப்பட்டேன். என்ன செய்வது! இறைவனின் சித்தத்தை நாம் எதிர்க்க முடியாது. அம்மாவுக்கு 87 வயது முடிய இன்னும் எட்டு நாட்கள் இருக்கின்றன. அவ இறைவனைப் புகழ்ந்து பாடிக் கொண்டிருப்பா. இப்பொழுது அவ நேரில் யேசுவைப் புகழ்ந்து பாடிக்கொண்டு இருக்கின்றா, அதனால் நாம் சந்தோசம் அடைய வேண்டும்.

அம்மாவைப் பார்த்தெடுத்த மூவருக்கும் என் அன்பையும் என் மிகப் பெரிய நன்றியையும் தெரிவியும்.

நான் கண்டியில் இருப்பவர்களுக்கும், பெனடிக்றறுக்கும் உடனடியாக எழுதிவிட்டேன். அம்மாவின் மரணத்தைப் பற்றி நான் இவ்வளவு தூரத்துக்கு எழுதிக்கொண்டு இருக்கும் போது உமது கடிதம் கிடைத்தது. 17 நாட்கள் எடுத்திருக்கு உமது கடிதம் வந்து சேர. கடைசியில் அம்மாவின் சுகவீனத்தை அறிந்தேன். மாமா அங்கு இல்லாதது துக்கமென்றும் எழுதி இருந்தீர். நீர் கை நடுங்க நடுங்கத்தான் எழுதி இருக்கிறீர். என்ன செய்வது! அவ இறைவனுடன் இருக்கின்றா. இன்னும் துன்பப்பட விடாமல் அவமேல் வைத்த அன்பினால் தன்னுடன் வைத்திருக்கிறார். நீர் தயவுசெய்து உமது மனதைத் தேற்றி திடப்படுத்திக் கொள்ளவும். அவ இவ்வளவு காலமும் இருந்தது போதாதா! பெனடிக்ற் எப்போதும் அக்காவைக் கேட்டு எழுதுவான். அவ இன்னும் கொஞ்சக் காலத்துக்கு இருக்க வேண்டும் என்பதே எனது ஆவல் என எழுதியிருந்தான்.

நாங்கள் இங்கு பூசைகள் வைத்து அவவின் ஆத்ம இளைப்பாற்றிக்காக மன்றாடுகின்றோம்.

இத்துடன் என் ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து அன்பும் ஜெபமும் அளித்து நிற்கின்றேன்.

---

● **Rev. Fr. E. Sebastian**
பங்கு தந்தை

Jeyapuram
19.09.1997

"May it be a comfort and help in some small way to know the heartfelt sympathy that comes to you today"

Praying for you.

● N. Nalaayini
(அன்பில் மலர்ந்தவர்)

# இரத்த பாசம் அல்ல இதய பந்தம்

பெண்மையின் பெருவடிவமாய் உண்மையின் உறைவிடமாய் எளிமையின் இருப்பிடமாய், எல்லோருக்கும் இனியவளாய் வாழ்ந்து இதமான பேச்சாலும், அனைவரையும் உபசரிக்கும் பண்பாலும் உயர்வான கருத்தாலும் உறவாடி உதிர்ந்து போன ஒப்பற்ற ஒரு தாயின் தன்மை பற்றி என் இதய பந்தத்தினால் ஏற்பட்ட எண்ணக்கருக்களைச் சொல்வதில் மிக்க திருப்தி அடைகின்றேன்.

கண்ணியம், கட்டுப்பாடு, கடமையுணர்வு, கடவுள் நினைப்பு இவற்றால் இணைந்த எடுப்பான தோற்றமும். அன்பினால் ஆட்சிசெய்யும் பாங்கும் பெண்ணிற் பெருந்தக்காள் என் பெருவிருப்பிற்குரியாளானதில் ஆச்சரியப்படுவதற்கில்லை. அரவணைத்து ஆரத்தழுவித் தாய்மையை வெளிப்படுத்தும் பக்குவம் அவரின் குடும்பத்துடன் என்னை இறுக பிணைத்துவிட்டதில் வியப்பு இல்லை.

ஒரு விருந்தாளியைப்போல் வீட்டில் காலடி வைத்த நான் குடும்பத்தில் ஒரு பங்காளி ஆகி விட்டதால் அவரின் வழி நடத்தலில் என்னை வளர்த்துக் கொள்ளவும், பக்குவப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பைத் தேடிக்கொண்டேன். எனது வாழ்வின் உயர்வில் கண்ணும் கருத்துமாய் இருந்து தாய்க்கு தாயாகி அவ்வவ் போது கண்டித்தும் அன்பாக அணைத்து ஆசை மொழியினால் ஆன்ற புத்திகள் புகட்டி நான் உயர்ந்து வளர ஆசைப்பட்டவர் அதனால் அவரின் பிரிவின் பின்னரும் அவரோடு வாழ்ந்த நாட்களை கனிவாக நினைத்துப் பார்க்கிறேன்.

இளமையிலே விதவையாகி விட்டவர் இருப்பினும் உள்ளத்திலே உறுதி தளராதவர் எடுத்த காரியங்களை இறை விருப்போடு கொடுத்து முடிக்கும் தையிரியமானவர். தான் பெற்றெடுத்த அன்பு மகனை பேரறிஞர் சபையிலே முந்தியிருக்கச் செய்ய வேண்டுமென்று முழுமனதாக முயன்றவர். தன் உயிரையே மகனாகக் கொண்டு அவரின் உயர்விற்காய் வாழ்ந்து அந்த இலட்சியத்தில் எள்ளளவும் பிசகாது வெற்றி கண்டவர். தன் ஒரே மகனை குருவாக்க வேண்டும் என்ற கொள்கையில் குலையாது நின்று எண்ணியதை எண்ணியாங்கு நிறைவேற்றியவர் இவ்வாறு தான் கண்ட கனவை நினைவாக்குவதற்கு அவரில் நிறைந்திருந்த தாய்மை சக்தியும் இறைபக்தியுமே துணை போயின என்பேன்.

அம்மம்மா என்று அழைக்கும் போதெல்லாம் ஓ....ய் என்று இழுத்துத்தரும் பதிலில் அவவின் மனம் மகிழ்ந்திருக்கும். உலகில் உதித்த

எந்தப் பிள்ளையும் தன்பிள்ளை என்றே சொல்லுவார். இணைந்து பழகும் எந்தக் குருவைக் கண்டாலும் என்மகன் என்றே கூறுவார் இத்தனைக்கும் ஓர் அற்புதமான பிறவியாகவே அவரைக்காண்கின்றேன்.

அவரது இனிய மிக இனிய குரல் எளிதாகவே எல்லோரையும் ஈர்ந்து விடும். கீசி காலம் வரை கனிவோடு இனிய குரலில் பாடினார். எண்பத்து ஏழு வயதிலும் இளமைக்குரல் மாறாமல் இனிமையாகப்பாடும் சுபாவமும், உதட்டில் உதிரும் சிரிப்பும், உள்ளத்தால் பொய்யாத வார்த்தைகளும் "ஓமெணெய், ஓமெணெய்" என்று ஓயாது வரும் பதிலும் கொண்ட இயல்பான சுபாவங்களை என்னால் மறக்கமுடியவில்லை.

எவரேனும் எதையாகிலும் பகிடிக்கெனும் சொல்வதைக்கூட மிகப்பெரிதாக எண்ணி விடுவார். உடனே ஒரு குழந்தையைப் போல் ஆகிவிடுவார். சிறிய விடயங்களையும் தாங்க முடியாத இதயம் கொண்டவர். சுடு சொற்களை சொட்டேனும் பொறுக்க முடியாதவர். பழகினவர்களை எப்போதும் பார்க்க வேண்டுமென்ற பெரு விருப்புடையவர். தன்னை பார்க்க எவரேனும் வந்தால் அவர்களை நிறைவாக உபசரிக்க வேண்டும். விருந்தோம்பல் பண்பு அவரிடம் நிறைவாகவே காணப்படும். மற்றையோரின் மனம் அறிந்து சமயோசிதமாக நடந்து கொள்வார். சில வேளைகளில் நான் பேசாது மௌனமாக இருந்தால் நான் அவவுடன் கோவித்துக் கொண்டிருப்பதாக மனம் வெந்து கொள்வார். "என்னிடம் என்ன கோபம் நான் என்ன பிழை செய்தேன்" எனக் கேட்டுக்கொண்டு அறிந்தும் அறியாமலும் செய்த பிழையை மன்னித்துக் கொள்ளுங்கோ என்று கூறுவதில் அவவிற்கு பெரிய மனத்திருப்தி இருக்கும் அவர் அப்படிக் கூறியதும் என் கோபம் எல்லாம் எங்கோ பறந்து போய்விடும். இப்படியான உள்ளத்தை ஒரு கணமேனும் புண்படுத்தியிருந்தேனே என இன்று எண்ணும் போது என்மனம் வெதும்புகிறது.

அம்மம்மா எழுந்து நடக்கும் போதெல்லாம் "டொக், டொக்" எனக் கேட்கும். பொல்லுச் சத்தம் என் காதுகளில் இன்றும் ஒலித்த வண்ணம் இருக்கிறது. அப்போது எல்லாம் அவரின் சுபாவங்கள் என்மனத்திரையில் வீழ்ந்து கொண்டிருக்கும்.

எனது பாதுகாப்பில் எனது உடல் நலத்தில் மிகுந்த அக்கறை காட்டினார். எனது விடையங்களில் எல்லாம் மிக உரிமையோடு தலையிடுவார். சாதாரண தலையிடி வந்தாலும் அடிக்கடி வந்து தொட்டு தடவி குருசு போட்டு ஆறுதல் அளிப்பார். தலையிடி மாறுமட்டும் அமைதியடையமாட்டார். தனது இளமைக்கால அனுபவங்களை பாடப்புத்தகம் போல் புகட்டுவார். இப்படி எனக்கு தாய்க்கு தாயாகி விழங்கிய தெய்வத்திற்கு முதுமைக்காலத்தில் இளைத்துப் போன வேளையில் பணிவிடைகள் செய்ய சந்தர்ப்பம் கிடைத்ததை பெரும் பேறாக கருதுகிறேன். பதிலாக அவரிடம் இருந்து நான் கற்றுக் கொண்ட பாடங்கள் பல.

எல்லோருக்கும் இறை ஆசியை பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற பெரு மனது படைத்தவர் என்பதால் எவராய் இருந்தாலும் அவரை அழைத்து நெற்றியில் குருசு போடாமல் விடமாட்டார். இத்தகைய ஒரு அற்புத பிறவியில் உறைந்து போய் இருந்த உத்தம குணங்களை வாயார எடுத்துச் சொல்வதில் நான் திருப்தி அடைகின்றேன். நான் மட்டும் அன்றி என் வீட்டில் அனைவருமே அவரின் அன்பிற்கு அடிமைதான். இடம்பெயர்வின் போது அவர் எங்களுடன் வாழ்ந்த காலங்களில் கூட தினமும் எங்கள் அப்பா காலை நித்திரை விட்டு எழும்பியவுடன் கை கூப்பி வணக்கம் என்று இவரிடம் கூறிச் செல்வதும் இவர் உடனே அப்பாவின் நெற்றியில் குருசு போட்டு விடுவதும் வழக்கமான நிகழ்வாக இருந்தது. எனது தாயார் நோய்வாய்ப்பட்டு இருந்தவேளை கண்ணீர் சிந்தி ஆழ்ந்த பக்தியுடன் மன்றாடியதை நான் நன்றியுடன் நினைத்துப் பார்கிறேன். எனது தாய்க்கும் தாயாக இருந்த அம்மம்மா என்தாய்க்கு முன்சென்று இடம் ஒதுக்கீடு செய்திருப்பார்.

உள்ளத்திலே முழுமையான தூய்மையை தாங்கிய இந்த அன்பு இதயம் உடல் தூய்மையையும், பெரிதும் விரும்பியது உண்டாலும், உடுத்தாலும், உறங்கினாலும், ஒரு நியதியில் அடிப்படையிலேயே செய்து வருவார். முக்கியமாக நேரம் தவறாமை, என்பதை மிகக் கவனமாக கைக்கொண்டார் செபம் செய்வதானால் இவருக்கு மிகப்பிரியம். ஒரு நாளேனும் செபம் சொல்லாமல் இருக்க மாட்டார். செபம் சொல்வதில் மட்டும் காலநேரம் பார்ப்பதில்லை. இறைவன் இவரோடு என்றும் இருந்திருக்கிறார். எனவே தான் இவர் நினைத்ததை அனைத்தையும் அவர் வாழ்வில் இறைவன் நிச்சயமாக்கிவிட்டார். இவருடைய ஆசைகளில் மிகப்பெரியவை தனது மகனை குருவாக்க வேண்டுமென்பதும் தான் சாகும் வரை மகனும் தன்னுடனேயே இருக்க வேண்டுமென்பதாகும். இவை இரண்டும் நிறை வேறியமை அவரின் ஆன்ம சாந்திக்குத் துணை போகும்.

மிக இளமைக் காலத்தில் விதவை நிலை அமைந்தவராயினும் அவரின்தியாக வாழ்வு எண்ணியதை எய்த ஏதுவாயிற்று. இறுதி நேரத்திலும் அம்மம்மா என்னவேண்டும் என்று கேட்டபோது கூட “அன்பு வேண்டும், அன்பு வேண்டும், அன்பு வேண்டும்” என்று கூறியவாறே மௌனமானார்.

இவ்வாறு அன்பின் அரசியாய் உயர்ந்து தேவனது இராட்சியத்தை எட்டிவிட்ட அம்மம்மா என்றழைக்கும் அருளப்பு அன்னம்மா என்ற அன்பின்உருவம் தன்னுடன் என்னைப் பிணைத்துக் கொண்டது இரத்த பாசத்தினால் அல்ல இதய பந்தத்தினாலே என்பேன்.

R. Jacintha
(அன்பில் மலர்ந்தவர்)

# வாழ வைத்தவர்

எனக்கு இப்போது 20 வயதாகி விட்டது. இன்று வரை எனது பெற்றோர் உறவினரிடமிருந்து கிடைக்காத அன்பை அம்மம்மாவிடம் பெற்றேன். இதனால் அவரை விட்டு விலகாது நின்றேன்.

"பிள்ளை" என்ற பாசம் நிறைந்த வார்த்தைகளால் கூப்பிட்ட குரல் தான் என் காதில் இன்றும் ஒலித்துக்கொண்டிருக்கின்றது. அம்மம்மாவிடம் வந்து தான் நான் செபம் சொல்ல கற்றுக்கொண்டேன். எவ்வளவு வேலைகள் இருந்தாலும் செபம் சொல்லும் நேரம் வந்ததும் "பிள்ளைவாடா செபம் சொல்லுவோம்" என்று கூப்பிட்டு பொறுமையுடன் அணைத்து செபங்களையும் சொல்லித்தருவா. சமையல் என்றாலும் அருகில் இருந்து உதவி செய்வார் முடிந்த வரை தனது தேவைகளை தானே நிறைவு செய்து கொள்ளுவார். "மற்றவர்களுக்கு கரைச்சல் கொடுக்க கூடாது என்று நானே செய்து விட்டேன்" என்று கூறுவார்.

அம்மம்மா என்னை விட்டுப்பிரிந்தாலும் அவர் இருந்து இறையடி சேர்ந்த இடத்திலேயே என்னை இன்றும் வளர்த்துக்கொண்டிருக்கின்றேன் எனது வளர்ச்சியில் கருத்து வைத்த என் தெய்வத்தை கண்களால் காணபதற்கு மீண்டும் ஒரு முறை ஆசைப்படுகின்றேன்.

அம்மம்மா முதுமையடைந்த காலத்தில் என்னால் முடிந்த உதவிகளை அவருக்கு நான் செய்து வந்தேன். அப்படியானதொரு பணியை என் மீது பாசம் காட்டி பற்றோடு நேசித்து வாழவைத்த தெய்வத்திற்கு செய்த பணியாக கருதி மனநிறைவடைகின்றேன். "பிள்ளை பிள்ளை" என்ற அவரின் வாய் இன்னும் ஒரு முறை பேசாதோ.

● K. Vimal
(அன்பில் மலர்ந்தவர்)

# அம்மம்மா ஓர் இனிய கனவு

“குழந்தை யேசுவே”. இது அம்மம்மா எனக்கு சூட்டிய பெயர். அப்போது எனக்கு பதினொரு வயது. அப்போதுதான் எனக்கு அம்மம்மாவின் அரவணைப்பு கிடைத்தது. அறியாத வயதில் அன்போடு நேசிக்கும் உள்ளங்களுக்கு உரியவனானேன். என்னை அறியாமலேயே அம்மம்மாவில் பற்றுவைக்கத் தொடங்கிவிட்டேன். அவரின் பக்கத்தில் நிற்பதை பெரும் பாக்கியம் எனக் கருதினேன்.

நான் குறும்புகள் செய்வேன். குழப்படியும் செய்வேன். பேரப்பிள்ளை என்று கூறுவார். நான் செய்யும் குறும்புகளை பார்த்து சிரிப்பார். வேறு யாரும் என்னை கண்டித்தாலோ, தண்டித்தாலோ அவவிற்கு பிடிக்காது. எத்தனையோ தடவைகள் அம்மம்மாவால் தண்டனையில் இருந்து தப்பியதுண்டு.

துரை, ராசா, இப்படி பல பல பெயர்கள் சொல்லி என்னை அன்புடன் அழைப்பார் படிப்பதற்கு தூண்டுவார். புத்திமதிகள் சொல்லுவார். என்னை பக்குவப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாய் இருப்பார். தினமும் என்னை கூப்பிட்டு நெற்றியிலே குருசு போடுவார். சில நேரங்களில் நான் கள்ளமாக அவரை தனிமையில் விட்டு விட்டு ஓடுவதுண்டு. விடாப்பிடியாக கூப்பிட்டு குருசு போட்டு விடுவார்.

எனக்காக இறைவனை மன்றாடி என் உயர்ச்சிக்காக பாடுபட்ட அம்மம்மாவை என்னால் மறக்க முடியாது. அவரோடு இருந்து குறும்புகள் பேசி மகிழ்ந்த நாட்கள் இப்போது மீட்டுப்பார்க்கின்றேன். அவருக்கு பணி விடைகள் செய்யும் வாய்ப்பை இழந்தமையை இட்டு ஏங்குகின்றேன்.

அம்மம்மா என்னிடம் அடிக்கடி நேரம் கேட்பது வழக்கம். அப்போதெல்லாம் நான் 10.10 என்றே சொல்லுவேன் என் குறும்பு பதிலைக் கேட்டு சிரிப்பார். இத்தகைய இனிய நினைவுகளை அம்மம்மாவோடு உடனிருந்த நாட்களோடு ஒப்பிட்டு பார்க்கிறேன். அந்த மகிழ்ச்சிகரமான நாட்களை மனதில் இருந்து அகற்ற முடியவில்லை குழந்தை யேசுவே எனக் கூப்பிடும் குரல் தான் என் காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறது. அம்மம்மா என்னை விட்டுப் பிரிந்து மாதங்கள் கடந்து நின்றாலும் ஒரு நாள் தான் ஆனது போன்ற உணர்வோடு அவருடன் பழகிய நாட்களையே இன்றும் நினைத்துப் பார்க்கிறேன். அம்மம்மா எனக்கோர் இனிய கனவு. ஆண்டவன் அவரை இடம் மாற்றி விட்டார். எனினும் அவர் என் மனதில் நீங்காமல் இடம் பிடித்து விட்டார்.

# கவலையில் நேரில் கலந்தோர்

## அன்பு விடை

**அருள் தந்தையர்**
F. N. L. சந்திரபோஷ் O. M. I
J. B. அன்ரனி
T. A. J. மதுரநாயகம்
J. X. B. றெக்னோ
J. M. செபஸ்ரியன்
A. சகாயதாசன்
S. F. கிருபானந்தன்
M. X. கருணைரட்னம்
S. N. C. ஞானராஜா
M. டேவிட்
A. ஞோறன்ஸ்
J. C. போல் றோகான்
M. றெக்ஸ்சவுந்தரா
G. அற்புதராஜா O. M. I
S. ஸ்ரனிஸ்லாஸ் O. M. I
S. அந்தோனிமுத்து O. M. I
S. A. ஜோஜ்
யேம்ஸ் பத்திநாதன்
C. G. ஜெயக்குமார்
தானியேல் S. J.
யோயல் S. J.
M. E. பயஸ்
A. F. லொஷிங்ரன்
T. A. தவராஜசிங்கம்

**அருட் செல்விகள்**
கிளோயர் H. C.
பசில் H. F.
லூர்ட்ஸ் H. F.
எவஞ்செலிஸ்ரா H. F.
பெனிங்னஸ் H. F.
எவறிஸ்ரா H. F.
ஜசிந்தா S. C.
ஜெயம் S. C.

**உற்றார் - சுற்றத்தார்**
திருமுக ஆலய மக்கள்
அரசரத்தினம் வித்தியாலயம்
மு/றோ. க. வித்தியாலயம்
பு/றோ. க. வித்தியாலயம்
சங்கரப்பிள்ளை குடும்பம்
பச்சமால் குடும்பம்
பேபி குடும்பம்
லில்லிமலர் குடும்பம்
பிலோமினா குடும்பம்
றோசமுத்து குடும்பம்
ஸ்ரெலா ஜீவானந்தம் குடும்பம்

**இனியவர்கள்**
மதிகரன் குடும்பம்
ஏரம்புமூர்த்தி குடும்பம்
A. பாலசிங்கம் குடும்பம்
S. P. தமிழ்ச்செல்வன்
R. நடேசன் குடும்பம்
Dr. S. சிவமோகன்
V. பாலகுமார்
Dr. S. சிவமோகன்
V. பாலகுமார்
Dr. R. ராஜகோபால்
K. பரராஜசிங்கம்
கதிரவேல்
சேந்தாளன்
ஜெயராஜா
தங்கன், சுதா குழுவினர்
T. விதுரன் குழுவினர்
அன்பரசன் குடும்பம்
ஜனனி குழுவினர்
S. சந்திரிக்கா, குழுவினர்
K. மருதம் குழுவினர்
ரமேஸ் குழுவினர்
K. பபா குழுவினர்
கல்விமேம்பாட்டுப் பேரவை
கல்வித் திணைக்களம்
கல்விக் கழகம்
V. இளங்குமரன்
பொன் வினாயகமூர்த்தி குழுவினர்
அருள் குடும்பம்
அன்பு குடும்பம்
S. சுப்பிரமணியம் D. E
பொன்சாபதி D. E
S. தங்கன் சகோதரர்கள்
ஏ. மூர்த்தி குடும்பம்
மாதா சபையினர்
T. S. செல்வன்
பாடகர் குழுவினர்
தவான் படப்பிடிப்பாளர்
P. நடேசன் குடும்பம்
அ. பாலசிங்கம் குடும்பம்

**Rev. Fr. A. I. Bernard**
அதிபர், S. P. C.

St. Patrick's College
Jaffna
22.09.1997

## புனிதரின் தோழமையில்

Please accept my heartfelt condolences on the death of your mother.

To anyone, the loss of the mother is heart rending. But in your case, I understand what this loss must mean.

Fr. Joe, I'll be very close to you these days in spirit. The College is offering a Mass next Monday. I'm sure your mother is in the company of the saints in Heaven. As for you, May God be your comfort and strength.

---

**Rev. Fr. J. Nicholas**
அதிபர் - உயர் குருமடம்

St. Francis Xavier's Seminary
Colombogam
Jaffna.
23.09.1997

I express my deepest sympathies at the demise of your dear mother. I know well how hard it would be to accept this loss. No one can replace a mother. I am sure that God will strengthen you and console you more than we do.

May she rest in peace.

---

**Mr. S. Vaikunthanathan**
ஆசிரியர் S. P. C.

ஒட்டறுத்த குளம்
19.09.1997

தாயாரின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சி அடைந்தேன். தாயாரின் பிரிவால் துயருறும் தங்களை எப்படி தேற்றுவேன் எனத் தெரியவில்லை.

இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்ள வேண்டும் என்று விரும்பியிருந்தும் வருவதற்கு வசதி கிடைக்கவில்லாமையால் மனவருத்தம் அடைந்திருப்பினும் தங்களுக்கு ஏற்பட்ட துயரத்தில் நானும் பங்கேற்று தங்களுடன் இதைப் பகிர்ந்து கொள்கின்றேன்.

தாயாரின் ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

**Rev. Fr. Louis Ponniah**
முன்னாள் OMI சபை முதல்வர்

Madhu Church
22.09.1997

## குருக்களின் அன்னை

Please accept my heartfelt condolences and deepest sympathies on this irreparable loss.

She was indeed a mother to all of us priests. She considered all of us as her sons and I always cherish the memory of my visits to her where she always showed her affection by her blessing and kiss.

---

**Rev. Fr. R. H. Sahayanayagam**
இயக்குனர் மறைக்கல்வி

Jaffna Diocesan
Office of Religious Education,
Jaffna.
23.09.1997

We heard the sad news of the death of your beloved mother.

Unfortunately we are unable to be present to share your sorrows. Anyway, please accept my heart felt condolences. I am sure the Good Lord will grant her eternal peace and place in His kingdom.

May her soul rest in peace.

---

**Xaverian Family**
உயர் குருமடக் குடும்பம்

St. Francis Xavier's Seminary
Colombogam
Jaffna
24.09.1997

We heard about your mother's death. Really you may be feeling sad at the loss of your dear one.

At this hour our Xaverian family sympathizes with you. Our heartfelt condolences to you Father.

We are very sad at being unable to take part in your mother's funeral.

**Rev. Fr. G. V. Pilendran**
முன்னாள் உப அதிபர் SPC

O. L. R.
4th Cross Street,
Jaffna
24.09.1997

## மனம் கவரும் செயல்

Let me express my heartfelt sympathies and condolence over the bereavement of your dear mother. Whenever I met her, she always made the sign of the cross on my forehead. This small gesture impressed me very much.

I am sure she will be rewarded by the Almighty for her many sacrifices and good deeds. These days I remember her in my prayers, and pray for the repose of her soul.

May her soul rest in peace.

---

**Rev. Fr. S. J. Rajanayagam**
இயக்குனர் - குடும்ப வளத்துணை

Ahavoli
131, Bankshall St. Jaffna
24.09.1997

Please accept my heartfelt condolences. I just heard about your mother's death. She was a very loving mother. I could experience this when I was at Pandianthalvu. I offer Mass for her tomorrow.

---

**Sister Joyce Marie A. C.**
ஆசிரியர் S. P. C.

Lourdes Convent
11(3) Temple Road,
Jaffna
24.09.1997

I heard the sad news of your mother's death. I am extending my heartfelt sympathy to you. I am praying for the repose of her soul. I am also praying for you that He may grant you the strength to bear this loss.

You are the only child for your mother and I know it's hard to accept...

● **V. Rev. Fr. J. P. E. Selvarajah**
குருமுதல்வர்-யாழ் மறைமாவட்டம்

Bishop's House
Jaffna
25.09.1997

## விசுவாச வாழ்வு

As I arrived (yesterday from Colombo) the first news I had was the very distressing news of the death of your dearly beloved mother. I hasten to offer you, dear Father, my hearfelt sympathies and deep sentiments of sorrow at her death.

She was all you had and the Good Lord has now designed to call her to Himself to reward her for her heroic life of love and sacrifice of her only child to the Lord. May she now be glorified in Paradise. Her faith life and her many apostolic activities as a legionary and in every Church work will surely win for her the crown she deserves. We all benefitted by her prayer and motherly concern over the years, and on our part we shall keep praying to God to speed her entry into His heavenly abode.

I also offer you the sentiments of sorrow and assurance of prayers from all of us here, your Brother Priests who join me in offering you their condolence.

You were so devoted to her and faithfully cared for her in her last years under very trying conditions. Now that the Lord has freed you, you will be able to serve Him ever more than before.

Fr. Saveri is here and he expects to offer a Family Mass on Saturday (27.9.1997) and we will join him.

● **Teachers' Guild**
ஆசிரியர் சங்கம் S. P. C.

St. Patrick's College
Jaffna.
24.09.1997

Grieved to hear about the death of your beloved mother. Accept our heart-felt condolences and deepest sympathies.

We the teachers of St. Patrick's partake in your sorrow.

Mas. J. Emmanuel
உறவினர்
Rajendra Road,
Jaffna
25.09.1997

## எமது வழிகாட்டி

இன்றுதான் அம்மாவின் மரணம் பற்றி அறிந்தேன் I. C. R. C மூலம் அறிவித்தல் கிடைத்தது. பத்திரிகையில் எல்லாம் விபரமாக கிடைத்தது. கடிதம் எழுதவோ கவலைதான் அம்மாவைத்தானே கடிதத்திலேயே (விழித்து) முதல் எழுதுகிறனான். கஷ்டப் பட்டு இறந்தாவா? அல்லது அமைதியாகவா? மருத்துவ மனையில் இருந்தாவா?

பாவம், அன்னை தெரேசாதான் கூப்பிட்டுவிட்டா போல் தெரியுது, வருகிற மாதம் 10ம் திகதி அன்னம்மாச்சியின் பிறந்த நாள்வருகுது என்று இன்று காலைதான் கதைத்தோம். அது மாறி இறப்பாய் போச்சு.

அவா எனக்கு சொன்னவா மல்லாகத்தில் தான் சாவேன் என்றும். அவாவின் ஆசைக்கு மாறாய் நடந்து விட்டது. எல்லாம் ஆண்டவன் செயல் அவா இவ்வுலகை விட்டு பிரியும் போது எங்கள் எல்லோரையும் நிச்சயம் நினைத்திருப்பா.

எங்கட அம்மாவிற்கு (மரியம்மா) சரியான கவலை. உங்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் படி சொன்னார். இறுதிப் பயணத்தில் கலந்து கொள்ளாதது அவவுக்கு அப்பா அம்மா இவர்களுக்கு, சாரியான கவலை. ஊரில் வயதில் கூடியவர் இவர் தானே. நெடுகலும் இவவைப் பற்றி கதைக்கிறநாங்கள்.

எங்களுக்கு அச்சியச~~சிய~~சிஷ்ட சிலுவை போடப் பழக்கினதே அன்னமாச்சிதான். எங்களுக்கு கோவிலில் கை கும்பிடாட்டால் எத்தனை அடி அடித்திருப்பா இப்ப நிச்சயம் மோட்ச வீட்டில் இருப்பா. தொடர்ந்தும் எங்களுக்காக பரிந்து பேசுவா.

கடவுள் ஒரு போதும் கைவிடமாட்டார். அம்மம்மாவின் மறைவையொட்டி யாவர்க்கும் எங்களின் அனுதாபங்கள்.

Mrs. Angela Alphonsus
ஆசிரியர் S. P. C.
68, Old Park Road,
Jaffna.

....உங்கள் தாயாரின் மறைவையொட்டி நான் முன் ஒரு கடிதம் எழுதியிருந்தேன். அது உங்கள் கரங்களுக்கு எட்டவில்லைபோலும்...

எனதும், எனது குடும்பத்தினரதும் ஆழ்ந்த அனுதாபங்களை மீண்டும் தெரிவிக்கின்றேன். எமது கல்லூரியின் சிறப்பு விழாக்களின் போது அவருடன் கதைத்து, சிரித்து அளவளாகிய மகிழ்ச்சிகரமான நினைவுகள் என் மனதில் இப்பொழுதும் பசுமையாயுள்ளன.....

**Mrs. Kamala Ponniah**
(காலம் சென்ற S. P. C. விஞ்ஞான ஆய்வுகூட பொறுப்பாளரின் மனைவி)

833, Hospital Road,
Jaffna
25.09.1997

## அன்பு அம்மா

அன்புடனும் சோக உள்ளத்துடனும் எழுதுவது: அம்மம்மாவின் மரணச் செய்தியை பேப்பரில் அறிந்து கொண்டேன் அம்மாவின் பிரிவால் துயருறும் உங்களுக்கு எம் மூவரின் அழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்பு அம்மாவின் இழப்பை நீங்கள் தாங்கிக் கொள்ள மாட்டீர்கள் என்பதை நாமறிவோம். அவவின் அன்பிற்காக நீங்கள் என்னென்ன கஸ்டங்களையெல்லாம் அனுபவித்து அவவை எவ்வளவு சந்தோசமாக ஒரு குறையும் இன்றி நிறைவாக வைத்திருந்தீர்கள் இது உங்களுக்கு மன நிறைவையும் ஆறுதலையும் அளிக்க வேண்டும். இவ் வேளையில் நாங்கள் உங்களோடு கூட இருக்க முடியவில்லையே என்று கவலைமேல் கவலையாய் இருக்கிறது.

நாங்கள் மூவரும் தனிமைப்படுத்தப்பட்டு அனாதைகளானது போல நீங்கள் தனிமைப்பட்டு அனாதையாகி வீட்டீர்களே என்பதை நினைக்க எம் வேதனை இன்னும் அதிகரிக்கிறது என்ன செய்வது. எல்லா துன்ப துயரங்களையும் இறைவனின் பாதத்தில் ஒப்படைப்போம்.

அம்மாவின் ஆன்ம சாந்தியடைய பூசை ஒப்புக் கொடுத்து நிதமும் மன்றாடி வருகிறோம்.

---

**Mrs. T. Alphonsa**
(பெறாமகளின் மகள்)

135, Second Cross St.
Jaffna.
25.09.97

ஆசையாச்சியின் மரண செய்தி கேட்டு மிகவும் வேதனை அடைகின்றோம். யாரும் காண முடியாத நிலையாகி விட்டது. என்ன செய்வது. நீங்கள் மனமுடைந்து மிக வேதனையடைந்த நிலையில் இருப்பீர்கள் என நினைக்கின்றேன். யாவரும் ஒரு நாளைக்கு பிரியத்தான் வேண்டும்.....

உங்கள் கல்லூரி ஆசிரியர்கள் கண்ணீர் அஞ்சலி பேப்பரில் போட்டார்கள் அப்பா சுவாமியும் தகவல் கொடுத்திருந்தார்.

- **Sister Victorine HC**

Colombo
29.09.1997

## எல்லாம் உமக்காக

Just a little while ago only I heard of the death of your dear mother..........

I am sure you really feel the loss as she was there for you all through your life. You did not have to share with anyone and you are now alone also with your grief and loss I suppose. May be you also feel relieved that she is at peace now. She would have suffered terribly with all the dispalcement and loss. I assure you of my prayers for her and for you as well.

---

- **Sister M. Consilia H. C.**

Holy Cross Convent
24, Norris Avenue,
Colombo 8.
29.09.1997

"Words alone can never tell
The things that hearts can feel
But this is sent with sympathy
That's very deep and real".

Please accept my deepest sympathies at the loss of your mother. I was shocked to learn from Sister Clare about your mother's home - going. I feel so sad that I was not able to be present there personally to participate in your great sorrow. I assure you of my prayers not only for the repose of the soul of your mother, but also for you that you may courageously grace the days when you will certainly feel Amma's absence.

Please give my kind regards and loving greetings to the teacher who looked after your mother.

- **Mrs. J. Margret - Baby**
(பெறா மகள்)

64/58, Sangamitha Mawatha,
Colombo 13.
30.9.97

## ஆசையாச்சி

ஆசையாச்சியைப் பற்றி அறிந்தோம். உண்மைதானா. நேற்றுத்தான் அறிந்தோம். உண்மையா என அறியத்தான் எழுதுகின்றேன் கேட்டவுடன் அம்மா கவலைபட்டு கண்ணீர் விட்டா பொய்யாக இருக்க வேண்டும் என்று மன்றாடினோம். ஆசையாச்சியைப் பற்றி அறியத்தரவும்.

- 13.10.97

அம்மாவின் மரணத்தைப் பற்றி அறிந்ததும் பெரும் கவலை அடைந்தோம். எங்களுக்கு முதலாம் திகதி தான் தெரியும். அதன் பிறகு நான் சிங்கராயருக்கு அறிவித்தேன். அவனும் கவலைப்பட்டான். உம்மோடு எப்படித் தொடர்பு கொள்வதென்று தெரியாமல் தவிக்கிறான்.

---

- **Sister Jerome A. C.**
தலைவி - யாழ் கார்மேல் கன்னியர்

Carmel Convent,
Racca Road,
Jaffna.

With our deepest sympathy and prayers on the demise of your beloved Mother.

"Through hours filled with sadness
Through days and weeks of grief
However deep your sorrow
Hold on to this belief
That each moment in its passing will help
to ease the pain
And with the love and care of friends
You'll build your life again.

● **Mr. Z. Singarayer J. P.**
முன்னாள் பிரதம இலிகிதர் S. P. C

50 B, Green Lane,
Colombo 13.
05.10.97

# பரலோக அம்மா

"சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள் அவர்கள் தேவனுடைய புத்திரர்கள் எனப்படுவார்கள்".

யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த செய்தியை கொண்டுதான் நான் உங்களுக்கு எனது மனமார்ந்த கவலையை தெரிவிக்கின்றேன். இங்கு பல இடங்களில் விசாரித்தேன். ஆனால் எவருக்கும் உமது அருமை தாய் காலமாகிவிட்டதாக தங்ளுக்குத் தெரியாது என சொன்னார்கள்.

நீங்கள் உங்கள் தகப்பனை 65ம் நாளில் பலிஎடுத்தீர்கள் இப்போது உங்கள் 65ம் வயதில் உமது தாயை பறிக்கொடுத்தீர்கள் இவ்வளவு காலமும் அம்மா உம்மடனும் நீர் அம்மாவுடனும் இருந்ததையிட்டு யோசிக்கும் போது பல பல கற்பனைகள் என் மனதில் உதிக்கின்றன. ஆண்டவர் இவ்வளவு பாடுகளையும் அனுபவிக்கும் போது மாதா மிகவும் மௌனமாக தன் ஊர்வலத்தை நடத்தி முடித்தார். இதில் ஒரு கட்டம் தான் நீங்களும். அம்மாவுக்கு ஒரு நோ வந்தால் அது உமது உடம்பில் வந்தது போல் அங்கும் இங்குமாக ஓடோடி என்னென்ன செய்ய வேண்டும் அதையெல்லாம் செய்து வந்தும் சுகம் அடையும்வரை நீர் உணவின்றி உறக்கமின்றி திரியும் காட்சியை நான் பல சந்தர்ப்பங்களில் பார்த்திருக்கின்றேன்.

நான் Fr. Constantine இடமும் கேட்டேன், அவருக்கும் தெரியாது என்று சொன்னார். நாங்கள் அம்மாவிடம் எங்களுக்காக வேண்டிகொள்ள வேண்டுகின்றோம். அம்மாவுக்கு மன்றாடுவதில் பிரியோசனம் இல்லை. ஏன் என்றால் அவ பரலோகத்தில் இருக்கின்றா என்பதும் நிட்சயம். இப்போது அவ எங்கள் எல்லோருக்காகவும் கடவுள் இடத்தில் நேருக்கு நேர் எல்லாவற்றையும் பேசி எங்களுக்கு பதில் தருவா. இது மட்டும் சத்தியம்.

அம்மா என் கண்முன் எப்போதும் தோன்றும். நான் முன்பு பல பிரச்சனைகளில் இருக்கும் போது உங்கள் அருமைத் தாயின் செபத்தை கேட்பேன். அவவும் இல்லை என்று சொல்லாமல் எனக்காக கடவுளிடத்தில் செபம் செய்வார். எனது பிரச்சினையும் சுலபமாக முடிவு பெறும்.

நான் எங்கள் குடும்பம் சார்பாக எங்கள் கவலையை உங்களுக்கும் மாமாவுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெறும் எழுத்துக்களால் என் உணர்சிகளை எழுத முடியவில்லை. ஆயினும் ஒரு வரி. அம்மா உங்களைத் தொட்டுப் பார்க்க வேண்டும் போல் உள்ளது.

நீதியின் நிமித்தம் துன்பப்படுகின்றவர்கள் பாக்கியவான்கள். பரலோக இராட்சியம் அவர்களுடையது.!!

**● Sister Terese Grace A. C.**

St. Joseph's Convent
Batticaloa
06.10.1997

## பரிசுத்த பெண்மணி

"May it be a comfort to know that others care, and think of you at this sad time with sympathy and prayer".

Please accept my most heartfelt sympathies on the death of your beloved mother.

It was Kamala who wrote to me about it...

..... Certainly it would have been a great shock to you as it was to me and to my dear ones.

I was keeping ready to send her a Birthday card for the 10th. She is surely gone to heaven to celebrate her Birthday.

Ammah was a holy lady and was well prepared to meet the Lord, as always her talk was on God...

At her age Ammah had undergone various hardships due to the 'operations' May God grant Ammah the Eternal happiness and reward her for all her good acts and for giving the church a Priest!.

---

**● Sisters of Holy Family**

Holy Family Convent
Mulankavil

"May loving memories of one who meant so much to you bring peace and comfort to your heart and ease your sorrow, too...."

With deep sympathy.

- **Miss. Rangini,Nitjini & Che**

54 Wasala Road,
Colombo 13.
08.10.1997

## விண்ணக அமைதியில்

"When no words will ease the sorrow of another. Sympathy and caring, though unspoken, are still there".

Very special thoughts are with you at this time of sorrow. Please accept our heartfelt sympathy and condolences at the very sad death of your beloved mother. May God grant her soul eternal peace in Heaven.

உங்கள் அம்மாவின் இறப்பு செய்தி கேட்டு மிகுந்த வருத்தம் அடைகின்றோம்....... அனைவரின் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

09.10.1997

அம்மாவின் இழப்பு எம்மை மிகுந்த கவலையில் ஆழ்த்தியுள்ளது. எமது ஆழ்ந்த கவலையையும் ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

- **Mr. S. Mary Joseph**

58, Temple Road,
Jaffna.
10.10.97

Please accept my heartfelt condolences at the bereavement of your dear and loving mother.

It is very unfortunate that circumstances have separated us so far and wide, and made communication so difficult, so that we are unable to share our love and feelings with one another.

We are remembering her in our daily family prayers and specially during the Eucharistic sacrifice.

Being the only child, you have done all you can and made her life happy and comfortable, specially in her old age amidst all your other responsibilities.

May her soul rest in the peace of the Lord.

● **Rev. Fr. J. Michael Saverimuthu OMI**

உடன் பிறந்த சகோதரன்

Bishop's House,
Jaffna.
10.10.1997

## 87வது பிறந்த நாள்

Payerfully hope you are out of the sorrow enveloped atmosphere after your beloved Mother's death. It's a common lot of all mortals. So we must have enough Faith to accept God's decrees, even though the trial of separation and endearment still exist and will exist till our life depart.

Today is Akka's 87th B'day. She is with us and we believe in the one Church - Triumphant, Suffering and Militant. Let us celebrate her B'day by prayers and sacrifices.

For you, what she has instilled into your life for the last 65 years must be lived on till you leave this world and me too. I will soon join our blessed company of my dear ones departed.

I published the obituary notice in uthyan here, and also said a Requiem Mass at St. Anne's Pandianthalvu on 27/9, Our family community was present also Fr. Paul Nadcherthirm and Fr. Sahayanayagam and Fr. Ravichandran. Please remember St. Monica's request to her son Augustine to remember her at the Altar. So also you and I.

We must all thank God, next to my beloved Father your Mother topped the list of having lived more years. We must bless God.

A word of hearty Congrats to Sr. Nalayini and Miss Jacinta, not to miss Vimal. Three cheers for each for their heroic service up to the last. It was not given to me to be with you all to mourn the death of my beloved Sister and contribute my part, and share your grief. I can only imagine.

Please give my love and appreciation of all the wonderful services done by these ministering angels. Sure, still they must be feeling a lot; and no work now and could sleep away undisturbed throughout the night.

Hope you erect a solid tomb for your Mother, clearly written tablet. She was a privileged woman:

Her only youngest sister -- a nun
Her only brother -- a religious priest
Her only son -- a priest.
What more! She lived and enjoyed and thanked God.

● **Mr. M. Tharcisius**
முன்னாள் மரியாயின் சேனை
கொமிற்சிய தலைவர்

69 A, Perera Place,
Kavadana, Dehiwala.
12.10.1997

## சேனைச் சேவகி

இன்றைய "ஞாயிறு வீரகேசரி" (12.10.97) மூலம்தான் தங்களது அருமைப் பெருமைத் தாயாரின் மரணம் பற்றி அறிய முடிந்தது. தங்களது அன்னையினது இறப்பையிட்டுத் தாங்கள் அடைந்துள்ள கவலையில் நேரடியாக பங்குபற்ற முடியாத நிலையையிட்டு பெருங்கவலை அடையும் வேளையில், என் குடும்பத்தினதும், எனதும் ஆழ்ந்த துயரத்தையும் அனுதாபங்களையும் இத்தால் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தங்கள் அன்னையுடன், எனது கற்பித்தல் காலத்தில் குளமங்காலிலும் பின்னர் மரியன்னை சேனையில் ஆர்வமான சேவகியாகவும், அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் நோயாளர் நற்கருணை அளிக்கும் போது பங்குக் குருவுடன் செல்லும் போதும் மறக்க முடியாத தொடர்புகள் ஏற்பட்டதை இன்று நினைவு கொள்கிறேன்.

உங்கள் அன்னையின் ஆத்மா இறையின்பம் பெற்றிடத்தினமும் செபிப்பேன். அத்தடன் உங்கள் துயரும் தீரவும் செபிப்பேன்.

● **Mr. F. Francis**
ஆசிரியர் S. P. C.

St. Patrick's College
Jaffna.

"May you find comfort in your memories and peace in your faith".

"Sorrow is not forever...
Memory is".

Accept our heartfelt condolence.

● **V. Rev. Fr. P. Jesunesan O. M. I.**
யாழ். அ. ம. தி. சபை முதல்வர்

Madhu Church
13.10.1997

## நல்ல ஆன்மா

It was Fr. Devasagayam (Administrator of Madhu Church) who told me yesterday that your mother had passed away sometime back. I was distressed to hear the news. Immediately I offered a prayer for her in my heart.

Good soul, holy soul, a good human being..... She sure should have a place in heaven.

......I know your life would not be the same without your mother. But I also know you have the inner strength to cope and overcome.

●

02.06.98

I feel bad and rather sad, that we missed talking about that good soul. She was very much of an inspiration to me. God rest her soul!

● **Miss Nirmala Joseph**
ஆசிரியர் S. P. C.

St. Patrick's College
Jaffna.
13.10.97

உங்கள் அம்மா இறந்த செய்தி அறிந்தோம். அதற்கு எனது அனுதாபங்களையும் செபத்தையும் கூறி நிற்கிறேன்.

எங்கள் பாடசாலையில் 29.09 அன்று உங்களின் அம்மாவிற்காக கூட்டுத்திருப்பலி ஒன்று ஒப்புக் கொடுக்கப்பட்டது. அவ்வேளையில் Fr. Rector விசேடமாக உங்களையும் அம்மாவையும் பற்றியும் ஆழமான ஒரு சில கருத்துக்களைக் கூறினார். நீங்கள் இசையமைத்த கிறிஸ்தவ பாடல்களில் அன்னைக்கு என்றும் பாடலை அமைத்ததாகவும் உங்கள் வாழ்க்கையில் அன்னைக்கு கொடுத்த முக்கியத்துவம் பற்றியும் ஆழமான கருத்துக்களை கூறினார்.

எனவே இறுதிவரை உங்களின் அம்மாவுக்கு அருகில் நீங்கள் இருக்கும் பாக்கியம் கிடைத்ததற்கு கடவுளுக்கு நன்றி கூறுவதோடு, மேலும் உங்களின் குருத்துவப் பணி தொடர வேண்டும் என்றும் இறைவனை வேண்டி நிற்கிறேன்.

## துயர் துடைப்பவர்

● **Mr. S. Thevathasan**
உறவினர்

36/141, Eliyamulle,
Wattala
13.10.1997

12.10.97 வீரகேசரி பத்திரிகையில் உமது தாயாரின் 31ம் நாள் நினைவஞ்சலி கண்டு எனக்கு எனது தாயாரின் மரணசடங்கில் கலந்து கொள்ள முடியவில்லை என்பது எனக்கு மிக்க கவலையாக இருந்தது.

தாய்க்கு நிகர் உலகிலே ஒன்றுமே இல்லை. துக்கப்பட வேண்டாம். அவர் உண்மையில் மோட்சத்திற்குதான் உடன் செல்லுவா.

எமது சாபக்கேடோ என்னவோ தெரியவில்லை. என்ன கட்டு கோப்பாய் இருந்த எங்களுக்கு நாடோடியாக, அனாதையாக அகதியாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் வந்து விட்டது. இந்தக் கடதாசி மூலம் உங்களுக்கு ஆறுதல் அனுதாபம் தெரிவிப்பதை நான் விரும்பவில்லை. நீங்கள் இருக்குமிடம் சரியாக தெரிந்தால் நேரில் வந்து ஆறுதல் கூறத்தான் முயற்சிக்கின்றேன்.........

அம்மாவின் வாழ்க்கையில் என்னுடன் சம்பந்தப்பட்ட பலவிடயங்கள் எப்பொழுதும் என் மனதில் வந்து கொண்டு இருக்கிறது. நாங்கள் துயரப்படும் போது அவர் கூறிய ஆறுதல் வசனங்களை நாங்கள் ஒரு காலமும் மறக்கமாட்டோம். நான் கொடுத்து வைத்தது அவ்வளவு தான். நீங்கள் எமது வீட்டில் நடந்த மூன்று துக்ககரமான வேளையில் எனது சகோதரன் மாதிரி முன் நின்று சகல உதவிகளையும் செய்ததை என் சீவன் இருக்குமட்டும் மறப்பதில்லை.

---

● **Miss. M. M. Tarcicus**
ஆசிரியை S. P. C.

69A, Perera Place,
Kawdana, Dehiwala.
13.10.1997

உங்களது அன்னையின் மறைவை வீரகேசரியில் பார்த்தே அறிந்தேன். எனக்கு எவருமே இதைப் பற்றி அறிவிக்கவில்லை. நான் நோய் காரணமாக கொழும்பில்தான் இருக்கின்றேன். அதனாலேயே நான் இதைப் பார்க்க முடிந்தது. தங்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கிறேன். இவரின் ஆத்ம சாந்திக்காக என்றும் இறைவனை வேண்டுகின்றேன்.

● **Sister M. Sophia H. F.**
தலைவி - யாழ். தி. கு. கன்னியர் சபை

33 Muhandiram Lane,
Dehiwala.
15.10.1997

## அழகான மலர்

This is a small note from Dehiwela on behalf of all of us, I extend my heartfelt sympathy and prayers to you at the loss of your beloved mother.

I am really sorry to tell you, till I read the paper I didn't know about Amma's departure. It is really happy to think of her past memories. I am sorry that I cannot see her anymore. She would be a beautiful flower in the Garden of God. May she enjoy the eternal bliss and plead for us from Jesus.

I am sure it is great loss for you. May Amma support you from heaven.

● **Sister Francisca FMM**
உடன் பிறந்த சகோதரி

Our Lady of Lanka
Provincial House
86/1, D. S. Senenayake Mawatha,
Colombo -8.
20.10.1997

அக்கா ஆண்டவரோடு இருக்கின்றா. அது தான் எங்கள் சந்தோசம். 87வது பிறந்த நாளைக் காணமுடியாமல் போய் விட்டது. அதுதான் துக்கம்.

நீர் உம் சுகத்தை கவனியும். அம்மாவை நினைத்து துக்கப்பட வேண்டாம்.

● **Sister Herman Joseph**

Holy Family Convent
Valaipadu
15.10.1997

"We extend our deepest sympathy and hope that each beautiful memory of your loved one will remain as a comfort through your sorrow".

● **Mr. Z. Singarayer J. P.**
முன்னாள் பிரதம இலிகிதர் S. P. C.

50 B Green Lane, Colombo - 13.
17.10.1997

# குருசும் முத்தமும்

உங்கள் சோகம் நிறைந்த கடிதம் எனக்கு 10.10.97 இல் கிடைத்தது. அதில் முழு விபரமும் அறிந்தேன்......

அம்மாவின் முகம் என் கண்முன்னே நிற்கின்றது. அம்மா எவரை கண்டாலும் முதலில் நெற்றியில் குருசு அடையாளம் இட்டு முத்தம் கொடுத்து யேசு மரி சூசையப்பர் (கடவுள்) உங்களை காப்பாற்றுவாராக என்று தான் சொல்வா. அது மட்டுமல்ல போகும் போது அதையிட்டுத்தான் விடுவா நாங்கள் இதை யாரிடம் பெறுவோம். இது முதலில் உங்களுக்குத்தான் ஓர் பேரிழப்பு. அம்மா, அம்மா என்று ஓடோடிப் போவீர்களே. எனித்தான் அதன் தாக்கம் தெரியும்.

மேலும் அம்மா மோட்சத்தில் நிட்சயமாக இருப்பா நான் அவவுக்காக வேண்டுதல் செய்யமாட்டேன். பதிலாக மீண்டும் எனக்காகவும் எல்லோருக்காகவும் வேண்டும்படிதான் கேட்கின்றேன். நாங்கள் பெரும் பாவவாளிகள். எங்கள் வேண்டுதல் கேட்கப்படாது.

நீங்கள் அதிபராக வந்த போது, அம்மா எங்கள் இல்லத்திற்கு வந்த போது முதலில் கேட்ட கேள்வி என்ன பாருங்கோ தம்பி இப் பதவிக்கு வந்ததையிட்டு எல்லோருக்கும் எரிச்சலாகத்தான் இருக்கும் என்று. நான் சொன்னேன். அம்மா, சுவாமி இதை எனக்கு தாருங்கோ என்று கேட்டு வாங்கினாரா? இல்லை. தகுதியின் அடிப்படையில் தான் கொடுத்தார்கள். நீங்கள் ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். நான் நினைக்கின்றேன் அம்மா அன்று தொடக்கம் என்றும் ஒரு செபமாலை கூடுதலாக சொல்லியிருப்பா.

அம்மாவுக்கு வன்னியில் இப்படியான ஒரு பிரேத அடக்கம் நடந்ததைபார்க்கும் போது யாழ்ப்பாணத்தில் இருந்திருந்தால் இதில் பார்க்க நாலு மடங்கு கூடுதலாக வந்திருக்கும். எனக்கும் எனது குடும்பத்துக்கும்தான் அம்மாவைப் பார்க்க முடியாமல் போய்விட்டது. அம்மா செய்த எல்லா உதவிக்கும் நாங்கள் அவவுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்போம்.

(இன்று) 17ம் திகதி 13க்கு அன்னம்மா கோவிலில், குழந்தை யேசு கோவிலில் Fr. Augstine, பதுளையில் Fr. Rex, Fr. Rohan, Fr, Rajanayagam திருப்பலிகள் ஒப்புக் கொடுத்தார்கள். எங்கள் வீட்டில் Nov. 2nd இல் ஒரு பூசை அம்மாவுக்காக Fr. Rex ஒப்புக் கொடுப்பார்.

(தொ. 30)

- **Rev. Fr. J. Michael Saverimuthu O.M.I.**
உடன் பிறந்த சகோதரன்

Averikkadu,
Saveriarpuram, Kilaly.
23.10.1997

## விதைத்ததை அறுத்தா

உமது 25.09ன் கடிதம் 16.10 இல் கிடைத்தது. நன்றி. வெகுவிளக்கமாக, அக்காவின் கடைசி நாட்கள், மரண வேளை, மரணச் சடங்குகள் எழுதியது மகிழ்ச்சி....... அக்கா விதைத்ததை அறுத்தா. அவ்வளவுதான். நல்ல பாக்கியமான மரணம். இதற்கு மேல் என்ன வேண்டும்?

உன்னைப் பெற்று வளர்த்து பராமரித்து தன் ஒரே மகனை குருவாகக் கண்ட தாய்க்கு, நீ செய்ய வேண்டிய கடமையும் சரிவர செய்தாயிற்று. அதுவும் மகிழ்ச்சிக்குரியது. நீ கடந்த 10 வருடங்கள் மட்டில் உன் தாய்க்கு சிறப்பாய் பணி புரிந்தது உண்மைதான். ஆனால் உன் தாய் உன் முதல் 10 வயது மட்டும் பட்ட அரும்பாடுகள் அளவிடமுடியுமா? பிறந்தார் மாளவேண்டிய இயற்கையின் பொது விதி நமக்கெவர்க்கும் விலக்கு விதியல்ல

"தந்தை மகற்காற்றுமுதவி- அவயத்தில்
முந்தியிருப்ப செயல்". (குறள்)

"மகன் தந்தைக்காற்றுமுதவி - இவன் தந்தை
என்நோற்றான் கொல்லெனும் சொல்" (குறள்)

உன் மட்டில் உன் தாயும் நீயும் சரிவர செய்துள்ளீர்கள். இறையருளே இதற்கு காரணம். மரணச் சடங்குகளை விபரமாக அறிந்த போதும் உன் தாய்க்கு கடைசியாகச் செய்யக் கூடியது எல்லாம் நிறைவாக, ஆசைதீர உளவியல் ரீதியாக உனக்கும் (எனக்கும்) பெரும் ஆறுதலாகவுள்ளது.

நான் நினைக்கிறேன் 31ம் நாள் குழியில் சிலுவை நாட்டி இருப்பாய் என்று. (8ம் நாள் நாட்டப்பட்டது). இறை வகுக்கும் நாளில் தாயகம், எம் சிற்றூருக்குத் திரும்பும் போது உன் தந்தையின் கல்லறைக்கு அருகே தொட, ஒரு குழி கல்லறை கட்டி நினைவுக்கல்லும் நாட்டி விடு. காலம் பழுத்த வேளை உன் தாயின் எலும்புகளை உரிய அனுமதியுடன் எடுத்து வந்து அங்கே அடக்கம் செய்யலாம்.

சரி, எமது ஆறுதலாக உன் அம்மா, என் கடைசி அக்கா பரம திருத்துவத்துடன் ஒன்றித்து விட்டா. எம்மை விட்டுப் பிரிய வில்லை. ஒரே திருச்சபையின் அங்கமாக இருக்கின்றா. எமக்காக இறைவனிடம் பரிந்து பேசுகின்றா? விசுவாசிகளின் ஐக்கிய பிரயோசனத்தையும் விசுவசிக்கின்றேன்.

(தொ. 30)

● **Sister Mary Lucilla H. F.**

Holy Family Convent
Passaiyoor, Jaffna.
23.10.1997

## "காணிக்கை மாதா"

God comforts you in your grief!

It's with great sorrow we heard about the demise of your beloved Mother recently. We know what it is to lose a loving and self-sacrificing mother. In your case it is a tremendous loss, as you are her only child and she had willingly offered you to the service of God! (on the feast of the Presentation - 2nd Feb. 1946)

You have had the privilege of living with her and sharing her love and concern for a few years during our painful war situation. From God's throne of grace she'll continue to guard and guide you. This is our Christian hope and strength.

I assure you of my prayer for the repose of her soul and for all the graces you need in your great bereavement.

---

(28ம் பக்கத் தொடர்ச்சி)

என்னை பொறுத்த மட்டில் அம்மாவுக்கு பூசை தேவைப்படாது. ஏன் என்றால் அம்மா மோட்சத்தில் தான் இருக்கிறா....... உங்களுக்குத்தானே எதையும் தாங்கும் இதயம் இருக்கிறது. அம்மா எப்போதும் உம்மைச் சுற்றித்தான் திரிவா.

மீண்டும் எங்கள் குடும்பம் சார்பாக எங்கள் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

---

(29ம் பக்கத் தொடர்ச்சி)

இனி எமது கடமை திருப்பலிப் பீடத்தில் நினைவு கூருவது மாத்திரமல்ல, எம்மை விட்டுப் பிரிந்த எமது உடனுறுப்புக்களுக்காக பலியிலும் செபத்திலும் வேண்டுவதே..........

இனி நாளாந்தம் பன்முறை வேண்டுகின்றேன். மறப்பது கடினம், மறக்க முடியாது மறக்கவும் மாட்டேன்.

● **Mr. M. A. Piragasarasa**
தலைவர் - யாழ். கொமிற்சியம்

The Jaffna Comitium Laity Centre
P. O. Box 2, Jaffna.
25.10.1997

## ஒளி விளக்கு

தங்களின் ஒளி விளக்காய் திகழ்ந்தது வழி காட்டியாக வாழ்ந்த தங்களின் அன்னை 17.09.97 இல் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து யாழ் கொமிற்சிய மரியாயின் சேனை அங்கத்தவர்கள் ஆழ்ந்த மனவேதனை அடைகின்றனர். அன்னார் மறைவால் துயருறும் தங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் 5.10.98 இல் நடைபெற்ற யாழ் கொமிற்சியக் கூட்டத்தில் யாருக்காக செபிக்க வேண்டிய பகுதியில் உங்கள் அன்னையின் பெயரும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. என்பதை தங்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றோம்.

● **V. Rev. Fr. J. P. E. Selvarajah**
குருமுதல்வர் - யாழ் மறைமாவட்டம்

Bishop's House,
Jaffna.
25.10.1997

I was given your letter by your uncle even before he himself read it. It is a beautiful account of your beloved mother's holy death. I join you and others in thanking God for the gift of such a loving mother who was so close to God. you will have all her attention and prayer from above more than ever before.

The Bishop too passed on the copy of your letter He was touched by same. We are sharing it with your friends, to praise and thank God for her, her life, and happy death. May she now enjoy the peace and joy in the Risen Lord.

I can understand the void and loneliness you would be experiencing after such a close union, especially during her last days. You are realistic enough to accept the inevitable and carry on even though it will be hard for a while at least.

Fr. Saveri at times gets emotional and worries about you, but otherwise he has accepted it stoically. On the 31st day there was a Requiem Mass at Kulamankal.

**Rev. Fr. S. Rex Constantine C. M. F.**
முதல்வர்

St. Claret Centre
55, Ragama Road, Welisara,
Ragama.
29.10.1997

## மாலையில் செபமாலை

It is with profound sympathy I write this letter to you. Really it is very sad news which I heard and confirmed while I was in Madhu.

I myself cannot forget your beloved Amma. While I was a school student, Ammah stayed in our house, and I remember the nice time I had with her. Still things are very fresh in my mind. Specially every evening, Rosary time was important for her and to us. The beautiful way of saying all the memorized prayers was marvellous. No wonder she would be in heaven with all the Angels.

I prayed and offered Mass for her soul.

---

**Rev. Fr. Justin Gnanapragasam**
அதிபர் S. H. C.

St. Henry's College
Illavalai.
30.10.1997

Please accept my deepest sympathies at the death of your beloved mother. Please be assured of my prayers. I know you will miss her a lot - but I'm sure she is there with the Lord, interceding for you. I know you have no one to call 'mine'. Your mother's departure could leave you very lonely. Anyway, this is something we priests have to bear up till our Visa comes to enter the next life.

● **Mr. T. Kalamany**
விரிவுரையாளர்
யாழ். பல்கலைக்கழகம்

'Mani Malikai'
Alvai South, Alvai
02.11.97

## அன்னையின் மகிமை

மிக அண்மையில்தான் (உங்கள்) முகவரியைப் பெற்றுக் கொண்டேன். இதன் காரணமாகவே உங்களுடைய அம்மாவினுடைய மரணச் செய்தியைக் கேள்விப்பட்டும் எனது அனுதாபங்களை முன்னதாக தெரிவித்துக் கொள்ள முடியவில்லை. உங்கள் அன்னையின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிராத்திக்கின்றேன்.

கர்த்தரின் சேவைக்காக ஆற்றல் மிக்க ஒரு புத்திரனைப் பெற்று உருவாக்கி விட்டமை அந்த அன்னையின் மகிமையை என்றும் உலகிற்கு உணர்த்தும்.

அன்னையின் இழப்பிலே உங்களதும் உங்கள் மாமாவினதும் துயரங்களில் நானும் உணர்வு பூர்வமாக பகிர்ந்து கொள்கிறேன்.

● **Mr. A. Edward**

Ammiyapa Nagar,
5th Cross St.
Do No. 7 , Vayalur Road,
Trichy 17, S. India
03.11.1997

உங்கள் தாயாரின் மரணச் செய்தியை எமது முன்னை நாள் யாழ். கொமிற்சித் தலைவர் மோ. தார்சீசியஸ் அவர்களின் மூலம் அறிந்தேன். எங்களால் பங்குபற்ற முடியாவிட்டாலும் தங்களுக்கும் தங்கள் சுற்றத்தவர்களுக்கும் எமது ஆழ்ந்த கவலையையும் துக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஒரு இடத்தல் இருந்து எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்ட எம்மை தேவன் பல கோணங்களாக பிரித்து விட்டார். அதை நினைக்கும் போது கவலை தான் எல்லாம் அவன் செயல். உங்கள் தாயாரின் மறைவை உங்கள் மாணவனும் எனது மகனுமாகிய செபஸ்தியான் (கனடா) X. R. பிரான்சிஸ் அவர்களுக்கும் அறிவிக்கின்றேன்.

உங்கள் தாயாரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக எனது நாளந்த செபத்தில் நினைவு கூருகின்றேன். உங்கள் தாயார் கூடிய கெதியில் மோட்சவாசிகளின் கூட்டத்தில் சேர்க்கப்பட்டு தமிழ் சமுதாயத்துக்காக மன்றாடி வருவா என்பதும் என் நம்பிக்கை.

- **Miss Patricia Patrick**
  முன்னாள் SPC ஆரம்ப பாடசாலை பொறுப்பாளர்.

9/45, Glebe Street,
Forest Hill 3131,
Victoria,
Australia.

## நீங்காத நினைவுகள்

Losing a mother is one of the deepest sorrows a heart can know. She meant the world to you......... You were a special part of her life..... and you made her very happy.

So when you're remembering all the special together times she touched with the love only a mother can give, may be it will help you to think of the joy you brought to her life, how much she loved you, too.

What the heart has once owned and had, it shall never lose.

- **(Late) Mrs. M. A. Thambiratnam**
  முன்னாள் S. P. C. மத்திய பரிவு பொறுப்பாளர்

20, Milagiriya Avenue,
Bambalapitiya,
Colomb0 - 4.
04.11.1997

I heard from someone that your mother had passed away. My heartfelt sympathies to you and to Fr. Saverimuthu.

Your mother was very good to us. We loved her so much. We feel very sad that we couldn't participate at the funeral service.

Be cheerful, Father. Don't worry.

● **Mr. Z. Singarayar J. P.**
முன்னாள் பிரதம இலிகிதர் SPC

50, Green Lane,
Colombo - 13.
13.11.1997

## இந்தியாவுக்கு அம்மா

My Congratulations on your 39th. Ordination Anniversary on 21st. December 1997.

இத்தினத்தை அம்மா பார்க்க முடியாமல் போய் விட்டதை நினைக்கும் போது துக்கம் தான். ஆனால் மறுபக்கம் பார்க்கும் போது அம்மா மோட்சத்தில் உங்கள் இந்த புனித தினத்தை மிக விமரிசையாக கொண்டாடுவா என்பது எனது அசைக்க முடியாத நம்பிக்கை.

அம்மா 39 வருடத்துக்கு முன் உமது குருபட்டத்துக்கு இந்தியா வருவதற்கு எத்தனையோ தடைகளையும் கடந்த வந்தது என் கண்முன் நிற்கின்றது.

தங்களுடைய முதற் பூசைப் பலி குளமங்காவில் நடந்ததும் அதற்குப் பின் சிறிய குடிசையில் கொண்டாட்டம் நடத்தம் எனக்கு இப்போது நினைவில் இருக்கிறது.

● **Sister Maria Goretti H. C**

61, Gregory's Road,
Colombo - 7.
10.11.1997

In these few lines I wish to express my deepest sympathy on the loss of your beloved mother who was called by God to her eternal home. In these sad hours we must renew our faith in God because it is only through Him we can get strength and courage. I understand your feeling being only son. I am sure she had a happy death and you have done your best while she was alive. She will rest in peace. Amma will be with you in your time of difficulties.

**Mr. K. Selva**

Germany
29.11.1997

## வாழ்க்கைத் துணை

மனதில் வேதனையுடன் இருக்கும் உங்களுக்கு எனது ஆறுதல் வரிகள். அக்காவின் கடிதத்தில் அம்மம்மா எங்களை விட்டு பிரிந்ததாக அறிந்தேன். நானும் மிக வேதனைப்பட்டேன். கடவுளுக்கு என்றும் அர்ப்பணித்த உங்கள் வாழ்க்கையில் அம்மம்மாதான் உங்களுக்கு துணையாக இருந்திருப்பார். அவர்களின் இழப்பு உங்களை பெரிதும் பாதித்திருக்கும்.

"தாயின் சொல்லைப் போல் ஒரு வேதம் எங்கும் கேட்டதில்லை. தாயின் அன்பைப்போல் ஒரு தெய்வத்தையும் பார்த்ததில்லை",

என்பார்கள், இந்தப் பூமியில் தாயின் அன்புக்கு உவமைகள் கூற முடியாது. எனவே Father மனதை ஒருநிலைப்படுத்தி கவலையின்றி இருக்கவும்.

---

**Fr. Jeevanadas Fernando OMI**
S. P. C. மத்திய பிரிவு பொறுப்பாளர்

St. Patricks College,
Jaffna.
16.11.1997

We heard the death of your mother through Fr. Rector. I know it is indeed a terrible grief which has come upon you. I am writing a short note to say how deeply we all sympathise with you in your terrible loss.

In this bitter trial I pray that you may be sustained by the Higher Power Jesus Christ.

Please accept the deep and true sympathy which is all I can offer.

---

**Mrs. Jeyanthy Moses**
S. P. C. முன்னாள் பிரதம இலிகிதர்

22/12, Welcome Colony,
Anna Nagar Wesf
Chennai. S. India.

We heard the sad news of your mother's death. Do please accept our heartfelt condolences.

May God's healing love be your comfort in this hour of sorrow and always.

With prayers and deepest sympathy!

Mr. S. Stanislaus
ஆசிரியர் S. P. C.

3, Maruthady Road,
Jaffna.
01.12.1997

## போற்றப்பட வேண்டியவர்

....வவுனியாவிலேதான் தங்கள் தாயார் இறந்த செய்தியை அறிந்தோம்.

தங்களின் தாயாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததுதான். அந்த அன்னையின் தியாக வாழ்வைப் பொறுத்த மட்டில் அந்த அன்னை என்றும் நினைவுகூரப்பட வேண்டியவராகவும் இருக்கின்றார்.

நான் அவரோடு பழகிய காலம் குறுகியதாயினும் அந்த உள்ளத்தின் குண இயல்புகளை என்றும் மதிக்கின்றேன். இறைவன் பாதத்தில் அந்த நல்ல உள்ளம் ஆன்ம சாந்திபெற நாம் அனைவரும் வேண்டி நிற்கின்றோம். அன்னையின் பிரிவால் கவலையடைந்திருக்கும் உங்ளுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றோம்.

நிலையில்லாத இந்த வாழ்வில் இறைத்துணையை நாடுவதைவிட வேறு என்ன தான் எம்மால் செய்ய முடியும். தொடர்ந்து மன்றாடுவோம். தாத்தாவும் தனது கவலைகளை உங்களோடு பகிர்ந்து கொள்கிறார்.

Mr. S. M. Martyn

Chenai.
26.11.1997

சென்ற கிழமை சிங்கராயர் எழுதிய கடிதத்தில் தங்கள் அன்புத்தாயின் மரணம் பற்றிக் குறிப்பிட்டதோடு தங்கள் முகவரியையும் குறித்திருந்தார்.

எனதும் என்னைச் சார்ந்தோரினதும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். உங்கள் தாயின் ஆத்மா சாந்தியடைவதாக.

எனது மனைவியின் மரணம் பற்றி சிங்கராயர் மூலம் அறிந்து இருப்பீர்களென நம்புகின்றேன்...... கடவுள் தந்தார் கடவுள் எடுத்துக் கொண்டார் என்று இருக்கின்றேன்.

● **Sr. M. Consilia H. C.**

Holy Cross Convent,
29, Norris Avenue,
Colombo 8.
05.12.1997

## தியாக சீலிகள்

I feel, of so many priests I know, you are richly blessed by God, for you were able to take care of your mother during her last few years on this earth. This services you were able to give her with the help of Nalayini.

Your mother sacrificed or rather joyfully gave her 'treasure' to the Lord, and He in turn rewarded her manyfold on this earth itself.

Nalayini, in fact, should be rewarded and this cannot be easily done in any human terms, for her service was motivated only by love, generosity, and dedication. The Lord will bless her for this selfless service.

This Christmas you will miss Ammah..... I shall remember Ammah in my prayer and more than that I shall pray to her...... I am sure your mother will be looking down on you lovingly from heaven during these days.

● **Rev. Fr. Alex Dassanayake**

National Seminary,
Ampitiya.
10.12.1997

It was only recently I heard that you had lost your mother. My heartfelt sympathies. R. I. P.

● **Mrs. Ruthirakumaran**
ஆசிரியர் S. P. C.

St. Patrick's College,
Jaffna.

"May you find comfort in your memories and peace in your faith".

**Mrs. Suganthini**
பெறாமகளின் மகள்

15/6, Nimalamaniya Mawatha,
Hendala, Wattala.
11.12.1997

## வரவேற்பவர்

(எனது திருமணத்தின் பின்) அம்மாவுக்கு கடிதமும் Photo வும் அனுப்ப நினைத்து எல்லாரிடமும் உங்கள் விலாசத்தை விசாரித்தேன்.

அம்மம்மா நிச்சயமாக எதிர்பார்த்திருப்பா. எப்போதும் எங்களைத்தானே நினைத்துக்கொண்டு இருப்பா. புது வருடம் பிறந்தால் காசையும் வைத்துக்கொண்டு பார்த்துக்கொண்டு இருப்பா. நான் இங்கே இருந்தாலும் அம்மாவை அடிக்கடி நினைப்பேன். கடைசி நேரம் கட்டாயம் எங்களை நினைத்திருப்பா. அவவைக் காணமுடியாதது சரியான கவலையும் மனவேதனையும். அக்காவும் எழுதியிருந்தா அவவுக்காக மன்றாடுகின்றேன்.

மாமா நீங்கள் தனித்துவிட்டதாக நினைக்க வேண்டாம். அம்மம்மா எல்லோருக்காகவும் மன்றாடுவா. அவா நல்ல இடத்துக்குதான் போய்விட்டா யார் எங்களை விட்டு போனாலும் கடவுள் எங்களை விட்டு போவதில்லை. துன்பங்களிலே எங்களை தனது தோளிலே சுமந்து செல்லுகிறார். தாயுக்கும் தந்தைக்கும் மேலாக கடவுள் அன்பான துணையாயிருப்பார். கவலைப்படாதேயுங்கள் உங்களுக்காக மன்றாடுகிறேன்.

**Mr. M. Jeyarajan**

51, St. Peter's Place,
Colombo - 4.
11.12.1997

உங்களின் Letter கிடைத்தது. உங்களின் அம்மாவின் இழப்பையிட்டு நாங்கள் மிக கவலை அடைந்தோம். முன்பு நான் St. Patrick's க்கு வரும் பொழுது என்னுடன் அவர் கதைத்ததை நினைவுபடுத்துகின்றேன். Father, நாங்கள் யாராவது பக்கத்தில் இருந்திருந்தால் உங்களுக்கு எவ்வளவு ஆறுதலாக இருந்திருக்கும். என்பதை உங்களின் Letter இன் மூலம் அறிய முடிகிறது....

இந்த முறை X'mas உங்களுக்கு ஒரே தனிமையாக இருக்கும் என நினைக்கின்றேன்.

**● Mr. M. Ben Aseervatham**
(பெறாமகன்)

Appt. 28,
3 Rue des Amandies,
44600 - St Nazaire, France.
15.12.1997

## இறைவன் சந்நிதியில்

Your letter of 19th. Oct. reached me just recently with the copy of the letter sent to Mama. That moved me much and I wept with nostalgic thoughts of her hovering in my mind. Earlier on hearing of her passing away I prayed and arranged for a mass in our parish church for the repose of her soul. But on reading your descriptive letter I had the feeling that you were narrating it directly to me with eyes full of tears. I was really moved, and kneeling before the statue of the Sacred Heart and Our Blessed Mother I recited a decade of the Rosary. It took me sometime to restore my self-confidence and reason.

Why must we cry for a person living in the presence of God, which is the real goal of one's birth in this world? I now pray for her, but not weep over the loss. We have one more soul in heaven to pray for us.

So, don't be broken-hearted. Surely, just as she prayed for you fervently during her life-time, she will continue to do so in heaven as well. Cheer up. It is with that spirit of joy I wish you a happy Christmas and a Peaceful New Year.

---

**● Rev. Fr. Jerribel Kirupaharan**

St. Francis Xavier's
Seminary,
Colombogam, Jaffna.

Kindly accept my belated heartfelt sympathies. May Amma rest in peace. May you be strengthened and comforted.

Since I was away from the country, Only recently I came to know about the death of Amma. I very well understand the loss you experience. You are always in my thoughts and prayers. Let us still believe that the departed are with us.

**● Mr. V. N. Nithiananthan**

புகலிடம் அளித்தார்

Thunnalai North,
Karaveddy.
15.12.1997

## தெய்வீகமானார்

நான் இவ்வளவு காலமும் உங்கள் தாயின் தெய்வீக மறைவை ஒட்டி நான் என் அனுதாப செய்தியை அறிவிக்காததையிட்டு நான் மிகவும் கவலைப்படுகின்றேன் மனவருத்தப்படுகிறேன் மனவருத்தப்பட்டுக் கொண்டும் இருக்கிறேன். பிந்திய அனுதாப செய்தியாக இருந்தாலும் ஏற்றுக்கொள்வீர்கள் என்ற நம்பிக்கையில் உள்ளேன்.

நான் உடனடியாக எழுதவில்லை, என்னுடைய மனைவி ஆஸ்பத்திரியில் வந்த பின்னும் அவவின் உடல் நிலை சரியில்லை.

உங்கள் தாயாரும் எங்கள் அம்மம்மாவும் தெய்வீகமானதையிட்டு என்னுடையதும் என் குடும்பத்தினரதும் ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தினையும் பிந்திய செய்தியாக இருந்தாலும் ஏற்றுக் கொள்வீர்கள் என்று பணிவுடன் வேண்டுகின்றேன்.

**● Rev. Fr. S. Edwin**

15.12.1997

My heartfelt sympathies for you on the loss of your dear mother! I came to know of this only lately from someone close to your mother.

I do pray for her. She does not need prayers as she did much on earth.

I will pray to her for my needs.

Please convey my love to Fr. Saveri....

Greeting to the teacher who has been so helpful to you and to your mother at a time most needed.

**● Rev. Fr. J. P. E. Selvarajah**

குருமுதல்வர் யாழ் மறைமாவட்டம்.

Bishop's House, Jaffna.
23.12.1997

I know you will miss your dear mother this Christmas Season - but I am sure she will not make you feel her loss but will certainly support you from above.

- **Mr. Johan Robinson**
(பெறாமகள் — மகன்)

20, A. V. Voltaire,
93190 Livry Gargan,
France.
01.01.1998

## "மகனின்" சாட்சியம்

உங்கள் கடிதம் கிடைத்தது. அம்மாவின் இறப்பு பற்றி செய்தி 9.10.97 அன்றுதான் எனக்கு என் அம்மா மூலம் கொழும்பில் இருந்து தெரிய வந்தது. அன்றே தெரியப்படுத்த வேண்டியவர்களுக்குத் தெரியப்படுத்தினேன்.

அம்மாவின் இறுதி நாட்கள், சாவு இறுதிச் சடங்குகள் பற்றிய விபரங்களை உங்கள் கடிதம் மூலம் நான் அறிந்து கொண்டேன் அம்மா சாவதற்கு சில நாட்களுக்கு முன் 2, 3 தடவைகள் என்னுடன் கனவில் வந்து கதைத்தா! அத்துடன் மல்லாக வீட்டில் நான் அவவுடன் வாழ்வது போல் தொடச்சியான கனவுகள் எனக்கு வந்தது. எனக்கு அப்படியான கனவுகள் ஏன் வந்தது என்பது முதலில் தெரியவில்லை. 9.10.97 இல் தான் தெரிந்தது ஏன் என்பது. தான் மல்லாகத்தில் அவவுடன் வாழ்ந்தது தான் வாழக்கை. அப்படியொரு வாழ்க்கை எந்த ஜென்மத்திலும் கிடையாது. எப்படியிருந்தாலும் நான் என் செபத்தில் அவுக்காக எப்போதும் மன்றாட மறப்பதில்லை.

- **Rev. Fr. Maria Antony**

Valipalayam P. O.
Via Sathy 638 - 402,
Erode Dt. S. India
29.12.1997

My sincere condolences to you at the loss of your beloved mother. I am saying Mass for her soul. R. I. P.

It is Fr. Dassa who gave me the news of your mother's passing away in her ninety's (87)

- **Mr. Albert Santhiapillai**
முன்னாள் ஆசிரியர் S. P. C

Canada

Sorry to know about the death of your dear mother, Please accept our heartfelt condolence. I came to know about a week ago from Mr. S. F. Xavier.

I can remember her very well. She was very dear to you. May God give the strength to overcome this great loss.

**Miss. Teresa Kurusumuthu**
ஆசிரியர் S. P. C

St. Patrick's College,
Jaffna.
06.01.1998

## தியாகச் சுடர்

தங்கள் அன்னையின் பிரிவுச் செய்தியறிந்து மிகவும் மனவருத்தமுற்றேன். ஏற்கனவே பிரிவின் கொடுமைக்குட்பட்டவன் நான் Fr. நீங்கள் ஒரு துறவியாக இருக்கலாம். ஆயினும் பெற்ற அன்னை அவவுக்கே உரித்தான பாசத்தையும் பரிவையும் இவ்வுலகில் யார் தான் கொடுக்கமுடியும்? முடியாது.

இவ்வளவு வயதிற்கும் சுவாமி மகனாருக்கு அன்னையாக, தந்தையாக, ஏன் எல்லோருக்குமே இருந்த அன்னையை எப்படித்தான் மறப்பது.

கவலை யாருக்குதான் இல்லை. என்ன செய்வது? கடவுளுக்கென ஒரேயொரு மகனை அர்ப்பணித்த அந்தத் தியாகச் சுடருக்கு நிச்சயம் ஆண்டவன் அவவிற்கு வான் வீட்டில் இடமளிப்பார். எனவே Fr. கலக்கத்தை விட்டு, அவவிடம் எமக்காக மன்றாடுவோம். ஆண்டவர் எமக்கு அமைதியும் அளிப்பார்.

---

**Mr. F. J. Navaratnam**
முன்னாள் S. P. C மத்திய பரிவு பொறுப்பாளர்

53, The Drive North Harrow,
Middle Sex, HA27ES, U. K.
06.01.1998

Yesterday, Sister-in-Law Mrs. Thambiratnam told me of your mother's demise......

I take the first opportunity to render our condolences, our sympathy and prayers. May she rest in peace.

"May precious memories of your loved one be a comfort to you all the time.

---

**Rev. Fr. R. Stalin**

St. Pius X. Parish, Onyx Paco,
Manila, Philippines
07.01.1998.

First of all I extend my hearfelt condolences on the death of your beloved mother. I can feel your pain as I too had lost my mother I am sure no one and nothing can replace her in your life in future. I prayed for repose of her soul.

- **Mr. R. Alphonsus**

100, Power House Road,
Trincomalee.
15.01.1998

It is better late than never. So please accept the deepest sympathies of our family on the death of your beloved mother. I am sure she is in the company of the saints with our Lord.

- **Sister M. Lisa A. C.**

220, Baudhaloka, Mawatha,
Colombo - 7.
15.02.1998

I hear that your beloved mother too passed away. She would have suffered a lot in such a situation, far away from home and dear ones. You have done your best to care for her. I prayed for her departed soul.

- **Mr. M. J. Aloysius**
உறவினர்

தியோகு வீதி, மத்தியூஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
29.03.1998

அம்மா இறந்த செய்தியை அறிந்து கவலைப்பட்டோம். இப்போதுதான் நீங்கள் வன்னியில் இருப்பதாக அறிந்தோம். ஆசைஐயா (பாக்கியநாதர்) அன்ரி (அமலோற்பவம்), எங்கள் அம்மா (செபமாலை அருளப்பு) இவர்கள் ஒன்றரை வருடத்திற்குள் ஒருவருக்குப் பின் ஒருவராக இறந்துவிட்டார்கள் எல்லோருக்கும் மன்றாடுங்கள்.

- **Rev. Fr. Anton Mathias**

St. Benedicts's Church,
Kachcheri Nallur Road,
Jaffna.
11.03.1998

**இறைவா உமக்கு நன்றி**

.........Though very late, please accept my condolences on the death of your beloved Amma. When I met her last near Karaveddy, she spoke to me well. Yes, she is with the good Lord, and let us thank God for her.









- **Son to His Maternal Uncle,**
  **Fr. J. Michael Saverimuthu OMI**

Arasaratnam Vidyalayam St.
Manthuvil,
Puthukudiyirippu.
25th. September, 1997

## Final Journey

My beloved Mama,

Ammah has gone to receive her eternal reward, leaving us shocked and bewildered. At about 3.20 p.m. on Wednesday, 17th. Sept., she passed away very peacefully. Before that, on 30th August, she had a slight chest pain and was back to normal as usual. Then on the 7th. Sept. she had her usual morning bath which she thoroughly enjoyed, pouring water on her body herself. But soon after, she suffered paralysis of the right side. Her right arm and leg were affected as on earlier occasions. Then in the afternoon she developed slight fever with shivering. We thought it could be Malaria. Though her fever subsided, she felt uneasy and asked for Extreme Unction, which was administered By Fr. Chandrabose on Tuesday, the 9th. at about 6.00 p.m. She had her last solid food with சரக்குத் தண்ணீர், at noon that day Tuesday. For 8 days she was on liquid diet, egg-pudding, Nestum cereals, and Sustagen. A Doctor working at the Civil Hospital at Puthukudiyiripu was called in on Thursday, the 11th. He examined her and ruled out Malaria, and said that everything, including her pressure, etc., was normal and that there was no cause for any worry. She spent her last 10 days, day and night, on bed, and the "Angels of Mercy" did a wonderful service looking after her comforts int he best possible manner, so that Ammah had nothing to complain of. In fact she was contented, and was serene all the time, talking with us even joking! on sunday 14th., she developed a speech defect. On Monday I offered Mass at herbed-side at 6.00 p.m. she joined us at prayers and received Holy Communion for the last time quite consciously. She asked for chicken broth on Monday and we were able to satisfy her request on Tuesday and Wednesday! Frs. Sahayathasan and Kirubanathan visited her in the morning on Monday. We recited the prayers for the dying on Monday and Tuesday nights. I imparted the apostolic blessing for the dying.

On Tuesday, 16th Sept., Poya-Day, I cancelled my visit to Mallavi for the பேரவை meeting. Doctor Sivamohan, the D. M. O. of Puthukudiyiruppu Hospital, and Mrs. Adele Balasingam visited her, and the doctor prescribed some medicine which was administered very regularly as directed, though she wasn't very conscious then. She showed no other signs of her imminent death, except for some profuse sweating at about 3.00 p.m. on Wednesday, a few minutes before she breathed her last. The D. M. O. (Dr. Sivamohan) was sent for and he, at about 4.30 p.m. pronounced her dead.

My friends and well wishers were on the spot within minutes to make all the necessary arrangements. Immediately I sent a message to you and to Kunchiammah through I. C. R. C. at Mallavi, who would have contacted you all on Thursday. The message to you was addressed to the Bishpo's House, and that to Kunchiammah to the Provincial Convent at Borella. Wednesday night broadcast on புலிகளின் குரல் gave the obituary notice at 8.45 p.m. and in the morning and evening the following day: and the two news papers, 'Eelanatham', and 'Eelanadu' carried the obituary notice on Thursday and Friday respectively. The body was embalmed at the early hours of Thursday (about 3.00 a.m.) She was a beauty with a smile on her face as she lay in state in our house. On hearing the news of her death many people from various walks of life paid their respects personally. I offered mass on Wednesday and Thursday at home. Recorded tapes of hymns and prayers (Rosary) which she herself had sung and recited were played intermittently during these two days, as was done during the last few days before her death. Various groups of people from adjoining churches and schools paid floral tributes and conducted prayer services. In the presence of a fairly large assembly of people and priests (Arulraj from Jeyapuram made it on time), at 2.10 p.m. on Friday, 19th Sept. Fr. Antonydas conducted the prayer service, with a short eulogy given by Fr. Mathuranayagam, at home. The body was removed on a hearse, accompanied by two bus-loads of mourners to St. Joseph's Church, Puthukudiyiruppu at 2.35 p.m. Concelbrated Mase was offered with about 15 priests, the sermon being delivered by Fr. M. X. Karuanaratnam (Kili) I bid farewell with a song (அன்னையைப் போல் ஒரு செல்வம் இல்லை) Fr. J. B. Antonydas officiated at the last rites in the Church, and Fr. F. N. L. Chandrabose

at the cemetary. She was buried in a brick-built grave at about 5.00 p.m. This was followed by biscuits and tea at the house. Close relatives (Philomena, Rosamuthu, Goretti, Stella) and some close friends and neighbours participated at the dinner. On the 8th. day i.e. Wednesday 24th. yesterday, the alms giving (செலவு) was held. We catered for more than 400-relatives, friends, parishoners and those from the refugee camps (Nelson and Saverimuthu from Jeyapuram joined us). We missed you!!! and you were in my thoughts at every moment during these days of distress, for I knew well that we could well have been a source of comfort to each other. God has taken away to Himself the only one who was most dear to you and to me in this world. "Fiat Voluntas Tua". May Ammah rest in peace and rise in Glory.

Sister Nalayini, Jacinta and Vimal send their loving regards and sympathies.

In Union of prayers and love,
Yours affectionately in Jesus

Sgd. G. A. Francis Joseph



மகன் தன் தாய் மாமனார்
அருள் திரு. J. M. சவரிமுத்து OMI
அடிகளாருக்கு
(தமிழாக்கம்)

அரசரத்தினம் வித்தியாலய வீதி,
மத்துவில்,
புதுக்குடியிருப்பு.
25.09.1997

# இறுதிப் பயணம்

என் அன்புமிகு மாமா,

அம்மா தனது நித்திய பரிசைப் பெற்றுக்கொள்ள சென்றுவிட்டா. நாங்கள் அதிர்ச்சியும் கலக்கமும் அடைந்துள்ளோம் செப்டம்பர் 17ம் திகதி புதன் கிழமை பிற்பகல் 3.20 மணியளவில் மிகவும் அமைதியாக எங்களை விட்டுப் பிரிந்தார். அதற்கு முன்னர் ஆகஸ்ட் 30ம் திகதி நெஞ்சுகுத்து என்று முறையிட்டா. முன்னைய தடவைகள் போல் இயல்பு நிலைக்கு திரும்பினா. பின்னர் செப்ரம்பர் 7ம் திகதி அன்று வழமைபோல் குளிப்பாட்டப்பட்டா. தானும் சேர்ந்து தன்மேல் தண்ணீர் ஊற்றி மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்பட்டா. அதன் பின்ன்ர் அவவின் வலது பக்கம் பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டது. முன்னைய தடவைகள் போல் அவவின் காலும் வழங்கமுடியாதிருந்தது. அன்று பிற்பகல் குளிருடன் காய்ச்சல் மலேரியாவாக இருக்கலாம் என எண்ணினோம். காச்சல் தணிந்த போதும் உடல் நிலை சரியாகவில்லை. தனக்கு அவஸ்த்தை பூசுதல் அருட்சாதனம் தரும்படி கேட்டா. செவ்வாய் 9ம் திகதி மாலை 6 மணியளவில் அருட்தந்தை சந்திரபோஸ் நோயில் பூசுதல் சடங்கை நிறைவேற்றினார். அன்று செவ்வாய் நண்பகல் சரக்கு தண்ணீருடன் உணவு உண்டா. அதன் பின்னர் 8 நாட்களாக புடிங் நெஸ்ரம் சீறியல் போன்றவற்றுடன் தண்ணீர்வகைச் சாப்பாடுகள்தான்· வியாழன் 11ம் திகதி புதுக்குடியிருப்பு மருத்துவமனை மருத்துவர் ஒருவர் வீட்டிற்கு வந்து சோதித்து மலேரியா இல்லையென்றும் அவவின் இரத்த அழுத்தம், மற்றும் உடல்நிலை நன்றாக உள்ளது என்றும் கவலைக்கு இடமில்லை என்றும் கூறினார். இறுதி 10 நாட்களும் இரவு பகலாய் கட்டிலில் தான். “அன்பின் சம்மனசுகள்” அம்மாவை எதுவித முறையீட்டுக்கும் இடம் அளிக்காது. அன்போடும் பாசத்தோடும் அவவின் எல்லாவித தேவைகளையும் ஆச்சரியகரமான முறையில் கவனித்து வந்தார்கள். எங்களுடன் கதைத்து பகிடிபரிமாறி, மிகவும் திருப்தியாகவும் அமைதியாகவும் எப்பொழுதும் இருந்தா. 14ம் திகதி ஞாயிறு அன்று அவவின் பேச்சில் குறைபாடு தோன்றியது, திங்கள் காலை அருட் தந்தையர் சகாயதாசன், கிருபானந்தன் அம்மாவை வந்து சந்தித்தனர். திங்கள் மாலை 6 மணிக்கு அவவின் படுக்கையறையில் திருப்பலி ஒப்புக்கொடுத்தேன் மனத்தெளிவுடன் செபங்களில் பங்குபற்றி

இறுதித் தடவையாக திவ்விய நன்மை அருந்தினா. அன்று கோழி விறாத்து குடிக்க விருப்பம் காட்டினா. மறுநாள் செவ்வாய், புதன் செய்துகொடுத்தோம் திங்கள் செவ்வாய் இரு இரவிலும் செபமாலை நல்மரணச் செபங்கள் சொன்னோம். அப்போஸ்தலிக்க பரிபூரண ஆசீரையும் நான் வழங்கினேன். மல்லாவியில் 16ம் திகதி செவ்வாய் போயா தினம் அன்று நடந்த பேரவை கூட்டத்திற்கு நான் செல்லவில்லை. அன்று Dr. சிவமோகன் (D. M. O. புதுக்குடியிருப்பு) திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் அம்மாவை வந்து பார்த்தார்கள். மருத்துவர் கொடுத்த மருந்தை முறையே கொடுத்து வந்தோம். அறிவற்ற நிலையில் இருந்தா. புதன் பிற்பகல் 3 மணியளவில் கடுமையாக வியர்த்தது. அதைச் தவிர உடன் சாவுக்குரிய அறிகுறிகள் இருக்கவில்லை. அமைதியாக உயிர் நீத்தார். Dr. சிவமோகன் (D. M. O.) 4.30 மணியளவில் வந்து அம்மா இறந்ததை உறுதிப்படுத்தினார்.

ஒரு சில நிமிடங்களிலில் எனது நண்பர், நலன் விரும்பிகள் பலர் தேவையான உதவிகள் புரிய குழுமினார்கள். உடனடியாக உங்களுக்கும் குஞ்சியம்மாவிற்கும் மல்லாவியிலுள்ள I. C. R. C. மூலம் செய்தி அனுப்பினேன். வியாழன் உங்களுடன் தொடர்பு கொண்டிருப்பார்கள். உங்களுக்கான செய்தி யாழ் ஆயர் இல்லத்திற்கும், குஞ்சியம்மாவினது கொழும்பிலுள்ள தலைமை மடத்துக்கும் அனுப்பப்பட்டது. “புலிகளின் குரல்” புதன் இரவு 8.45 மணிக்கு ஒலிபரப்பிலும், மறுநாள் காலை, மாலை ஒலிபரப்பிலும் சாவு அறிவித்தல் ஒலிபரப்பப்பட்டது. ஈழநாதம், ஈழநாடு தினசரி இதழ்களில் முறையே வியாழன், வெள்ளி நாட்களில் சாவு அறிவித்தல் பிரசுரிக்கப்பட்டது. வியாழன் அதிகாலை 3 மணியளவில் பூதவுடல் பக்குவப்பண்ணப்பட்டது. அழகே வடிவாய் முகத்தில் புன்முறுவலுடன் வீட்டில் அவரின் பூதவுடல் மக்களின் மரியாதைக்கு வைக்கப்பட்டது. அம்மாவின் மரணத்தை அறிந்து மரியாதை செலுத்த பல்வேறு நிலையினரும், பிரமுகர்களும் வந்து குவிந்தனர். புதன், வியாழன் இரவில் வீட்டில் திருப்பலி ஒப்புக்கொடுத்தேன். ஒலிபதிவு நாடாவில் பதிவு செய்த அம்மாவால் பாடிய பாடல்களும், செபித்த செபங்களும் செபமாலையும் அம்மா இறப்பதற்கு முந்திய நாட்களிலும், இறந்த பின் இவ் இருநாட்களிலும் இடையிடையே வீட்டில் ஒலித்தன. அயல் ஆலயங்களிலிருந்தும், பாடசாலைகளிலிருந்தும் மக்கள், பிள்ளைகள் குழுக்களாக வந்து மலர் தூவி செபித்தனர். 19ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.10 மணிக்கு குருக்களும் மக்களும் குழுமியிருக்க (ஜெயபுரத்தில் இருந்து அருள் வந்திருதார்) வீட்டில் அருள்தந்தை அன்ரனிதாஸ் இறுதிச் சடங்கை நிறைவேற்றினார், அருள்தந்தை மதுரநாயகம் அடிகளார் இரங்கலுரையாற்றினார். வீட்டிலிருந்து 2.35 மணிக்கு பூதவுடல் மோட்டார் பவனியாக இரு பேருந்து நிறைய மக்களுடன் புதுக்குடியிருப்பு புனித சூசையப்பர் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. 15 குருக்கள்

கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுத்தனர். அருள் தந்தை M. X. கருணாரத்தினம் (கிளி) மறையுரை ஆற்றினார். நான் ஒரு பாடல் ஊடாக (அன்னையைப் போல் ஒரு செல்வம் இல்லை) எனது பிரியாவிடையைக் கூறினேன். ஆலயத்தில் இறுதிச் சடங்கை அருள் தந்தை J. B. அன்ரனிதாஸ் நிறைவேற்றினார். சேமக் காலையில் அருள் தந்தை F. L. N. சந்திரபோஸ் தலமை வகுத்தார். மாலை 5 மணியளவில் செங்கல்லால் கட்டிய கல்லறையில் அம்மாவை நாம் அடக்கம் செய்தோம். வழமைபோல் வீட்டில் தேனீர் உபசாரம் அளிக்கப்பட்டது. எனது நெருங்கிய உறவினர். (பிலோமினா, றோசமுத்து, கொறற்றி, ஸ்ரெலா முதலியோர்) நெருங்கிய நண்பர்கள், அயலவர்கள் இரவு உணவில் பங்குபற்றினர். நேற்றைய தினம் 8ம் நாள், புதன் 24ம் திகதி, செலவு நடந்தது. உறவினர், நண்பர், ஆலய மக்கள், அருகிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள் முகாமிலுள்ளோர், மற்றும் ஜெயபுரத்திலிருந்து நெல்சன், சவரிமுத்து உட்பட 400 க்கு மேலானோர். பங்குபற்றினர்.

நீங்கள் தான் இருக்கவில்லை!!! எனினும் ஒருவருக்கொருவர் பெரும் ஆறுதலாய் இருந்திருக்கலாமே என்பதால், ஒவ்வொருகணமும் என் நினைவில் நீங்கள் இருந்தீர்கள். இவ்வுலகில் எனக்கும் உங்களுக்கும் அருமைப் பெருமையாயிருந்த ஒரே ஒருவரை இறைவன் தன்னுடன் எடுத்துக் கொண்டார். “அவர் சித்தத்தின் படியே ஆகட்டும்”.

அம்மா அமைதியில் இளைப்பாறுவாராக!
மகிமையில் உயிர்த்தெழுவாராக!

சகோதரி நளாயினி, யசிந்தா, விமல் மூவரும் தங்கள் அன்பையும், அனுதாபத்தையும் தெரிவிக்கின்றனர்.

அன்பிலும் செபத்திலும் இணைந்து, உங்கள் அன்புள்ள.

(ஒப்பம்) க. அ. பிரான்சிஸ் யோசவ்.



நேர்முகமாகவோ, அன்றேல் திருமுக மூலமோ
கவலையில் கலந்தோர்
அனைவருக்கும்,
சிறப்பாக

# "எங்கள் புதையல்"

உங்கள் இதயத்தைக் கவர்ந்திட,
அச்சேற்றி வெளியிட்ட

திரு. Z. சிங்கராயார் J. P.,
அவர்மகன்
அருள். திரு. S. றெக்ஸ் கொன்ஸ்ரன்ரைன் C. M. F.
இருவர்க்கும்

# நன்றி

அன்பிலும் செபத்திலும் இணைந்திருப்போமாக

"இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக"




Printed by Unie Arts (Pvt) Ltd.